Registered at the G. P. O. as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49


மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி தை 4ஆம் நாள் ரமழான் பிறை 13 (17-1-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 38

இனாம் இனாம் இனாம்
"மில்க்வைற் நீல சோப்"
பாவிப்பாளருக்கு பெரு அதிர்ஷ்டம்
எங்கள் சோப்பின் உறைகளைச் சேமியுங்கள்
50 உறைகளுக்கு
அழகான—கவர்ச்சியான—உறுதியான
"மார்க்கெட்டிங் பாக்"
இனாமாக உங்களுக்கு கிடைக்கும்.
எங்கள் காரியாலயத்தில் அல்லது
விற்பனை வானில் உறைகளைக்
கொடுத்து பரிசைப் பெறலாம்.

# நடேசபிள்ளை பூதவுடல் இன்று கொண்டுவரப்படும்

## இறுதிச் சடங்குகள் நாளை நடைபெறும்

### மரணச் செய்தி கேட்டு தலைவர்கள், மக்கள் அதிர்ச்சி



யாழ்ப்பாணம், ஞாயிறு

வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் மாரடைப்பினால் காலமான செனட்டர் சு. நடேசபிள்ளையின் இறுதிச்சடங்குகள் நாளை திங்கட்கிழமை மருதனாமடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் பூதவுடல் கொழும்பிலிருந்து காரில் இன்று காலை யாழ்ப்பாணம் வந்துசேரும்.

முன்னாள் தபால் தகவல் மந்திரியாகவிருந்த செனட்டர் நடேசபிள்ளையின் மரணச் செய்தி கேட்ட ஈழநாட்டு தமிழ் தலைவர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். பொதுமக்கள் ஆழ்ந்த துயரில் மூழ்கினர்.

அன்னாருக்கு இலங்கைப் பல்கலைக் கழகம், சமீபத்தில் "இலக்கியக் கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்திருந்தது. யாழ்ப்பாணம் நாவலர் ஆதீனம், "சைவ சித்தாந்த கலாநிதி" என்னும் பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது. இவருக்கு வயது 69.

#### கொழும்பில் அஞ்சலி

காலஞ்சென்ற செனட்டர் நடேசபிள்ளைக்கு கொழும்பு நகரமக்கள் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு, அன்னாரின் பூதவுடல் நேற்று பகல் 2 30 மணி முதல் 8-30 வரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. பெருந்திரளான மக்களும் பிரமுகர்களும், முன்னாள் எம். பி.க்கள், மந்திரிகள், வெளிநாட்டு, உள்நாட்டு அதிகாரிகளும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

இந்தியாவிலுள்ள அன்னாரின் மருமகன் திரு பாஸ்கரன் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராமநாதன் கல்லூரியிலும், பரமேஸ்வரா கல்லூரியிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஏராளமான மக்கள் நேற்றையதினமே மருதனாமடம் சென்று துக்கம் விசாரித்தனர்.

(செனட்டர் சு. நடேசபிள்ளை காலமான செய்தி நேற்றைய "ஈழநாடு" பிரதிய பதிப்புகளில் வெளியாகியிருந்தது.)

### புருண்டி பிரதமர் கொலை

லண்டன், ஜன. 16

புருண்டி பிரதமர் கொலை செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க ராஜாங்கப்பகுதி அறிவித்துள்ளது.

### மொரிஷியஸ் பிரதமர்

பம்பாய், ஜன. 16

மொரிஷியஸ் பிரதம மந்திரியும் ஆறு மந்திரிகள் சிலரும் நேற்று பம்பாய் வந்தனர். ...

### இலக்கியப்பணியாற்றுவதில் சிறந்து விளங்கியவர்

—தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

செனட்டர் நடேசபிள்ளையின் "சகுந்தலை வெண்பா" வுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எழுதிய முன்னுரையில், செனட்டர் நடேசபிள்ளையின் தொண்டினை வெகுவாகப் பாராட்டியுள்ளார். அவர் தமது முன்னுரையில் தெரிவித்திருப்பதாவது:

"திரு. நடேசன் சகுந்தலையின் கதையைத்தமிழிற் பாடித் தந்திருக்கின்றார் இந்தக்கதையை இன்றைய உலகமும், கற்று மகிழப்பேசுகிறது. மேனாட்டையும் அறிந்து அந்தப் புது ஒளியிலே நம் இந்து சமயப் பண்பாட்டைக் கண்டுகளிக்கும் பேற்றினை எல்லோருக்கும் வழங்கிய குடும்பம் ஒன்று உண்டு. வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் இந்த விளக்கம் கண்டு வாழ்ந்து பிறருக்கும் வாழ வழிகாட்டி ஒரு

(10-ம் பக்கம் பார்க்க

### டாக்டர் ஸி. பி. புகழுரை

செனட்டர் நடேசபிள்ளை தமிழில் யாத்துள்ள காளிதாசரின் சாகுந்தலா நாடகமான "சாகுந்தல வெண்பா"வின் வெளியீட்டை அண்ணாமலைப் பல்கலைக்கழக உடவேந்தர் டாக்டர் ஸி பி ராமஸ்வாமி ஐயர் கடந்த 63-ம் வருடம் செப்டம்பர் மாதம் அண்ணாமலையில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது: "சேர் பொன்னம்பலம் இராமநாதன் குடும்பத்தார் இலங்கையில் ஹிந்து கலாச்சாரத்தின் உயர்வுக்கும் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றியுள்ள தொண்டினை அளவிட முடியாது. திரு. நடேசபிள்ளையின் சாகுந்தல வெண்பா, தமிழ்க் கவிதையின் அரிய, இனிய பண்புகளையும் சமஸ்கிருத கவிதையின் ஆற்றலையும் ஒருங்கே கொண்டிருக்கிறது."

### "சமயப் பண்பும் ஆற்றலும் நிறைந்தவர்"

—சேர் கந்தையா வைத்தியநாதன்

திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த மகாசமாஜ 55-ம் ஆண்டு விழா சைவர் மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய சர். கந்தையா வைத்தியநாதன் செனட்டர் நடேசபிள்ளையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார். தமது உரையில் அவர் தெரிவித்திருப்பதாவது:

இவ்விழாவுக்குத் திறப்புரை நிகழ்த்திய திரு. சு. நடேசபிள்ளை, சைவசமயப் பண்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்தவர். சர். பொன். இராமநாதனின் வாழ்வைப் பின்பற்றி ஒழுகும் இவர், இவ்விழாவுக்குத் தலைமை வகிப்பதன் மூலம் இவ்விழா மேலும் சிறப்புப்பெற்றுள்ளது. அவரின் தொண்டு தமிழுக்கும் சைவத்துக்கும் கிடைத்த பெரும் பாக்கியமாகும்."

### செனட்டர் நடேசபிள்ளை வாழ்க்கை வரலாறு

**தோற்றம்: 21-5-1895 மறைவு: 15-1-1965**

செனட்டர் சு. நடேசபிள்ளை அவர்களை ஈழநாடும் தமிழகமும் நன்கு அறியும். இவர் ஈழத்திலும், தமிழகத்தில் தூத்துக்குடி, பழனி முதலிய இடங்களிலுள்ள சைவ சித்தாந்த சபைகள், கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருவாவடுதுறை ஆதீனம், சிதம்பரம் சைவசித்தாந்த மகாசமாசம், மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலிய இடங்களிலும் நிகழ்ந்த இலக்கிய சைவசித்தாந்த, இயல் இசை விழாக்கள் பலவற்றிலே தலைமை தாங்கியிருக்கின்றார். தூத்துக்குடி சித்தாந்தசபை, மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பவற்றால் சித்தாந்தப் பெருங்காவலர், சைவசித்தாந்தப் பெரும் புலவர் முதலிய பெரும் பட்டங்களையும் இவர் பெற்றிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் பரமேசுவராக் கல்லூரி அதிபராயும், சர் பொன்னம்பலம் இராமநாதனால் ஏற்படுத்தப்பட்ட கல்விஸ்தாபனங்களின் மேற்பார்வையாளராயும் கல்விப்பணியாற்றிய இவர் இலங்கை அரசாங்கத்தின் கல்வி நிர்வாகசபை அங்கத்தினராகவுமிருந்தார். இலங்கைப் பல்கலைக்கழக 'செனற்', 'கோட்' முதலிய சபைகளின் அங்கத்தவராகவும் கடமையாற்

(10-ம் பக்கம் பார்க்க)

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்
பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14. டாம் வீதி கொழும்பு
உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிறார்

[17-1-1965 தொடக்கம் 23-1-1965 வரை]

**மேடம்**

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) புதியபொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத்தயாராக இருங்கள். உங்கள் உறவினர் மட்டுமல்லாமல், அயலவர்களும் உங்கள் உதவியை நாடி வருவார்கள். இதனால் உங்களுடைய செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும். பணவிஷயத்தில் பொறுப்பு ஏற்கும் பொழுது மிகவும் நிதானமாக நடந்துகொள்ளவும். வெள்ளிக்கிழமை ஏதாவது பொறுப்பு, ஒப்பந்தம் முதலியவற்றிற்காக கையெழுத்து வைக்கும் பொழுது கவனமாக நடந்துகொள்ளவும்.

**இடபம்**

(கார்த்திகை 2-ம், 3-ம், 4-ம் பாதங்களிலும் ரோகிணி, மிருகசீரிடம் 1-ம், 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்த வாரத்தில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரும். புதுவிதமான அனுபவங்களும் இந்த வாரத்தில் ஏற்படும். நீங்கள் நடந்துகொள்ளும் விதத்தை மற்றவர்கள் மிகவும் நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருப்பார்கள். உங்களுடைய ஒவ்வொரு அசைவும் மிகவும் முக்கியமாக அவதானிக்கப்படும். உங்கள் சொந்தப் புத்தியின்படி நடந்து கொள்ளவும்.

**மிதுனம்**

(மிருகசீரிடம் 3-ம், 4-ம் பாதங்களிலும் திருவாதிரை, புனர்பூசம் 1-ம், 2-ம், 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) ஒரு மாதத்திற்கு முன் தொடங்கிய ஒரு விஷயம் உங்களுக்கு இந்த வாரத்தில் மிகவும் அனுகூலமடையும். குடும்பத்தில் இந்த வாரத்தில் அமைதி குறைவாக இருக்கும். தேகசுகத்தில் கவனமாக இருந்துகொள்ளவும். உணவு விஷயத்தில் மிகவும் நிதானமாக நடந்துகொள்ளவும். சாப்பாட்டின் தன்மையால் சுகக்குறைவு ஏற்படக்கூடும். வியாழக்கிழமை உங்களுக்கு மிகவும் அனுகூலமான நாள்.

**கடகம்**

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம், ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் மிகவும் முக்கியமான பொறுப்புக்களை உங்கள் மீது சுமத்தப் பார்ப்பார்கள். எந்த விஷயத்திலும் நீங்கள் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும் உங்களுக்குச் சமமான ஒருவர் நடந்துகொள்ளும் விதம் உங்களுக்கு நிம்மதியைக் குலைக்கும். எந்த விஷயத்தையும் நீங்கள் நிதானமாகக் கவனித்தீர்களானால் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கலாம்.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) குடும்பத்தில் வயதில் முதிர்ந்த ஒருவருடைய விஷயங்கள் உங்களுக்குத் தொல்லையைக் தந்துகொண்டிருக்கும். நீங்கள் எடுத்த காரியங்கள் சில இந்த வாரத்தில் ஒப்பேறும். சில நண்பர்களுடைய கொடுக்கல் வாங்கல் பொறுப்புக்களை நீங்கள் ஏற்கக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படும். சொந்த விஷயங்களை மற்றவர்களிடம் பொறுப்படைக்காதீர்கள். இதனால் பெரும் நஷ்டமடையக் கூடும்.

**கன்னி**

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) விவாகம் ஆகாத இந்த இராசிக்காரர்களுக்கு, விவாகப் பேச்சுக்கள் மிகவும் நெருக்கமாக நடைபெறும். கலியாணமானவர்களுக்கு புதிய நண்பர்களுடைய தொடர்பு ஏற்படும். பொருள் நெருக்கடியைச் சமாளிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். சிநேகிதர்களுடைய சில தொல்லைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு உங்களுக்கு ஏற்படும்.

**துலாம்**

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும் சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனித்தவர்களுக்கு) உங்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் சங்கடத்துள் மாட்டிக்கொள்வார், அதனல் உங்களுடைய நிம்மதி குறையும். சனிக்கிழமையன்று மிகவும் முக்கியமான கடிதம் ஒன்று எதிர்பார்க்கலாம். உங்கள் தேகசுகம் இந்தவாரத்தில் குறையக் கூடும். மனம் வருந்தக்கூடிய மாதிரி உங்கள் குடும்பத்தினர் நடந்துகொண்டாலும் நீங்கள் மிகவும்பொறுமையாக நடந்து கொள்வது நல்லது.

**விருச்சிகம்**

(விசாகம் 4-ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் வாழ்க்கையில் இந்த வாரம் மிகவும் முக்கியமானதாக அமையும், கொடுக்கல், வாங்கலுக்கு மிகவும் முக்கியமான வாரம். நீங்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க பணவருவாய் ஏற்படும். ஆனல் அதற்குரிய செலவினங்களும் காத்துக்கொண்டிருக்கும். சென்ற வாரத்திலும் பார்க்க இந்தவாரம் மிகவும் முதன்மையாகவிருக்கும். புதன்கிழமை உங்களுக்கு அனுகூலமான நாள். அன்று கொடுக்கல் வாங்கல் செய்ய நன்று.

**தனுசு**

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் மனநிலைமை இந்த வாரத்தில் அமைதியாக இருக்காது. வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். உங்கள் குடும்பத்தினரின் போக்கு உங்களுக்கு மனதில் சஞ்சலத்தையும் வாழ்க்கையில் வெறுப்பையும் கொடுக்கும். உங்களுடைய மனதில் உண்டாகும் சந்தேகங்கள் அப்படியே உண்மையாக நடப்பதைக் காணுவீர்கள். மனதில் கொந்தளிப்பு இருந்துகொண்டேயிருக்கும்.

**மகரம்**

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதத்திலும், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் குடும்பத்தினரின் சுகம் இந்த வாரம் பாதிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத அளவுக்கு வைத்தியச் செலவுகள் மிதமிஞ்சியிருக்கும். நெருங்கிய உறவினர் ஒருவரின் மறைவு இந்த வார இறுதியில் நடைபெறும். அதனல் நீங்கள் மிகவும் பாதிக்கப்படுவீர்கள். உங்கள் சுகத்தைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு அலைச்சல்கள் ஏற்படும் வீணாக உடம்பை அலட்டிக்கொள்ளாமலிருப்பது நல்லது.

**கும்பம்**


(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும் சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) வாழ்க்கையில் முக்கிய திருப்பமொன்று இந்த வாரத்தில் ஏற்படும். குடும்ப விஷயங்களிலும், தொழில் விஷயங்களிலும் இந்தத் திருப்பம் நன்மையைத்தரும், ஆனல் திருப்பம் ஏற்படும்பொழுது மனதிற்கு மிகவும் கசப்பாக இருக்கும். சில நண்பர்களுடைய மனக்கசப்பையும் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை உங்களுக்கு மிகவும் முக்கியமான நாள்.

**மீனம்**

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும் உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய சொந்தநிலையை தற்பொழுது உணர்வீர்கள். உங்களுடைய முன்னேற்றத்தை விருத்திசெய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் இந்த வாரத்தில் ஏராளமாக உண்டு. சில வயதில் முதிர்ந்த உறவினர்கள் உங்களுடைய விஷயங்களில் தலையிடமுயற்சிப்பார்கள். அவர்களுக்கு இடங்கொடுக்காமல் நடந்து கொள்ளுங்கள். பணவருவாய் பாதிக்கப்பட்டாலும், ஓரளவு நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

## இரைச்சல் போடும் விமானங்களுக்கு கட்டுப்பாடு

விமானங்களின் காதைக் குடையும் சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காக விமானம் ஓட்டிகளுக்கு மேற்குஜெர்மனியில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுப்பாடுகளை மீறுபவர்களைக் காட்டிக் கொடுக்கும் நூதனக் கருவி பிராங்க்பர்ட் நகரில் புதிதாக நிறுவப்பட்டிருக்கிறது. விமான நிலையக்கட்டிடத்தின் உச்சியில் பல நூறு அடி உயரமான கம்பங்களை நட்டு அதன்மேல் நுனியில் ஒலி பெருக்கிக் கருவிகளைப் பொருத்திஇருக்கிறார்கள். இக்கம்பத்தின் உயரத்திற்குக் கீழே விமானங்கள் பறக்கக் கூடாது. அப்படிப் பறந்தால், விமானத்தின் சத்தத்தை இக்கருவி கிரகித்து கட்டுப்பாட்டு நிலையத்திற்குத் தெரிவிக்கும். இதன்மூலம் அந்த விமானம் ஓட்டி யார் என்பதைக்கண்டு அவருக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

விவேகமுள்ள தாய்மார்,
தங்கள் குழந்தைகளின் சுகவளர்ச்சிக்கு
ஒஸ்டர்மில்க்கையே நம்புகிறார்கள்.

தாய் பால் ஊட்ட முடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும்.

தூய்மை மாறுத்தன்மையுடைய ஒஸ்டர்மில்க், ஆரோக்கியமளிக்கும் ஓர் பால் ஆகாரம். பச்சிளங் குழந்தையின் மென்மையான வயிற்றுக்கு பாதுகாப்பானது. இரும்புச்சத்தும், விட்டமின் Dயும் உள்ளிட்டு அமைக்கப்பட்ட ஒஸ்டர்மில்க், குழந்தையை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், வளரச்செய்கிறது.




நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக குழந்தைகள் வளர்ந்து திகழ ஒஸ்டர்மில்க்.

190/65

ஒஸ்டர்மில்க்






சைலால்

முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

விநியோகஸ்தர்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
போன்: 541. 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை — (8ம் பக்கத் தொடர்ச்சி)

விநாடிகளில் உன் உலகவாழ்வு முடியப்போகிறதா? அப்படித்தான் எண்ணினேன். ஆனால்... ஆனால்...

ஐயா நடந்துகொண்டவிதம்? உன் கையிலே துப்பாக்கியைத் தந்து அவர் கூறிய வார்த்தைகள்?

"நீ இந்த நிமிஷமே அவனோடே போயிடு. ஆனால் அதுக்கு முந்தி உந்தத்துவக்காலே என்னையும் உதிலே நிக்கிற உன்ர மோனையும் சுட்டுப் போட்டுப்போ"

அம்மா! ஐயா கடவுள் அம்மா, கடவுள்! அப்படிப்பட்ட ஐயாவை நீ...நீ...நீ...

### (5)

ஐயுந்தொடர்ந்து விழியும் செருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விடு கின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே!

ஓதுவரின் பாடல் இந்த உலகத்தின் ஆசாபாசங்களை எல்லாம் வெறுக்கத்தூண்டுகிறது. என் நெஞ்சமோ பழைய சம்பவத்தேற்றில் ஆழ்கிறதே!...

ஐயா கொல்லப்பட்டு நீண்ட நாட்களின் பின் முதன்முதலாக உன்னைப்பார்க்கப்போகிறேன். குற்றவாளிக் கூண்டில் கந்தையா அருகே அமைதியாக அமர்ந்திருக்கிறாய். உனது முகத்தை எப்படியாவது ஒரு முறை பார்க்கவேண்டும் என்ற ஏக்கம் என் நெஞ்சில்.

"உனது தந்தையை முதலாவது எதிரி கத்தியால் வெட்டும் போது உனது தாயார் பார்த்துகொண்டிருந்தாரல்லவா!"

முடிக்குரிய வழக்கறிஞர் வழக்கின் முக்கிய கட்டத்துக்கு வந்துவிட்டார். சாட்சிக் கூண்டில் நிற்கும் என்னையே அனைவரும் பார்க்கிறார்கள். ஆனால் நீயோ...... உள்ளத்து உணர்ச்சிகளை எல்லாம் கொன்று ஒழித்துவிட்டு ஜடமாக இருக்கிறாயே! மரணத்தின்பிடியிலிருந்து தப்பவேண்டுமென்ற ஆசை உனக்கில்லையா?

என்பதில்உன்வாழ்வையோ அன்றிச் சாவையோ நிர்ணயிப்பவை. மீண்டும் உன் முகத்தைப் பார்க்கிறேன். எவ்வித சலனமுமில்லை. அம்மா!...உன்னால் இனி இந்த உலகில் வாழமுடியாது என்ற உண்மை நன்கு விளங்கிவிட்டதா? நீயும் ஒருமனிதப் பிறவிதானே ஏன் உயிர்மீது ஆசையில்லை?

"கேட்ட கேள்விக்கு உடனே பதில்சொல்."—"எனக்கிடப்படும் கட்டளை இது. உன்னையே கூர்ந்து நோக்கி உன் உணர்வுகளோடு என் உணர்வுகளைப் பலியிடவிடப்படும் எச்சரிக்கை. உடனே நான் பதிலளித்தாகவேண்டும்!

ஆம்! நான் அந்தப்பதிலை அளித்தே விட்டேன். ...எந்தப் பதில் உன் உயிரை அழிக்குமோ அந்தப்பதிலை அளித்துவிட்டேன்.

### (6)

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும்
தோள்மேலும் கட்டிலிலும் வைத்தென்னைக்
காதலித்து முட்டச் சிறையிவிட்டுக்காப்பாற்றிச்
சீராட்டும் தாய் தனக்கோ தீ மூட்டுவேன்?

நீர்வழியும் கண்களுடன் நடக்கும் என்னை பாடகர் தன் கடைக்கண்ணாலே பார்க்கிறார். எண்ணங்கள் மீண்டும் சுழலுகின்றன.

வழக்கின் இறுதி நாள். மாலை ஆறு மணி. நீதி மன்றத்தில் விளக்குகள் யாவும் அணைக்கப்படுகின்றன. சுழன்றுகொண்டிருக்கும் காற்றாடி உனது வாழ்க்கைச் சுழல் முடியப்போகிறதென்றோ என்னவோ நிறுத்தப்படுகிறது. கறுத்த உடையிலே நீதியரசர் உள் நுழைகிறார்... எங்கும் ஒரே அமைதி. நீதியரசர் தன் நீண்ட சொற்பொழிவின் பின்னர் தீர்ப்பைக் கூறுகிறார்.

"...... ஆயிரத்தித் தொளாயிரத்தி அறுபத்தி மூன்றாம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முப்பத்தோராம் திகதி கண்டி போகம்பரை சிறைச்சாலையில் உள்ள நான்கு சுவர்களுக்குமிடையே மரகதம் சின்னையா ஆகிய நீ மரணம் அடையும் வரை தூக்கிலிடப்படுவாய்!"

உன் தலைவிதி நிர்ணயிக்கப் பட்டுவிட்டது. தீர்ப்பின் பின்னர் ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும். ஜனத்திரளைச்சமாளிக்க முடியாத பொலிசார் கைவிலங்கிடப்பட்ட உன்னை பொலிஸ வண்டிக்குள் ஏற்றுகிறார்கள்.

முதன் முதலாக நீ என்னைப் பார்க்கிறாய்! உன் பார்வையைத் தாங்க எனக்குச் சக்தியில்லை. கால்கள் இடறுகின்றன. உயரமானபடிக் கட்டில் நின்ற நான் கீழே விழுகிறேன். என் வாயில் இருந்து இரத்தம் சொட்டுகிறது. அம்மா...

இதுவரை காலமும் அழாத நீ...! உன் வாழ்வின் முடிவை அறிந்தபோதும் அதிர்ச்சி அடையாத நீ... நீ... என்னுடலில் இரத்தத்தைக் கண்டதும்...

"ஐயோ என்ர பிள்ளையின்ர வாயாலை ரத்தம் ஓடுதே!...... ஆசுபத்திரிக்கு ஆராவது அவனைக் கூட்டிக்கொண்டு போங்கவன்...! நான் பெத்த பிள்ளையே, உன்னை ஆரடா இனிக் கவனிக்கப் போறாங்கள்..." எனக்கதறுகிறாய்.

ஐயோ அம்மா...! என்னால் எதையும் தாங்க முடிந்தது! ஆனால் இவ்வார்த்தைகளை மட்டும் தாங்கமுடியவில்லையே!

அம்மா... உன் நெஞ்சில் கட்டைகள் அடுக்கப்பட்டு விட்டன. இறுதியாக என் எண்ணச் சுழல்கள் மிக வேகமாக உன்னை வட்டமிடுகின்றன...

உலகத்தைவெறுத்து ஆசாபாசங்களை விட்டுச் சென்றவனுக்கும் அன்னையின் பாசம் நீங்குவதில்லை. துறவியான ஒருவனை தந்தை வணங்குதல் வேண்டுமென்பது உலகவிதி. ஆனால் துறவானதும் அவன் தன் தாயை வணங்கவேண்டும். கௌசனுண்டியாகத் திரிந்த பட்டணத்தடிகள் இறுதியில் தாயின் உடலைத் தீ மூட்டி எரிக்கவில்லையா?

...ஒரு கைகொள்ளிக் குடத்தைத்தோளிலே சுமக்க மறுகையில்அக்கினியுடன் ஐக்கியமாகப் போகும் உன்னை வலம் வந்துகொண்டிருக்கிறேன்... நீ கொலைகாரி...! தொட்டுத்தாலி கட்டியவனுக்கு துரோகம் செய்த வஞ்சகி...! தமிழ்ப் பெண்புக்கோர் சாபக்கேடு... இப்பட்டத்தை எல்லாம் மனமுவந்து அளித்த உலகம் ஒன்றை மட்டும் மறந்துவிட்டதே!

நீ கொலைகாரியாக இருக்கலாம்... குடிகேடிதான்... வஞ்சகி என்பதில் சந்தேகமே இல்லை...! ஆனால்... ஆனால்...நீ என் அம்மா! தாய்... இதை யாராலும் மறுக்க முடியுமா...?

அம்மா!

அம்மா!

கொள்ளிக் குடம் உடைந்துவிட்டது.

என் பின்னே தீக் கொழுந்துகள் மேலே மேலே எழுகின்றன.

சுவாலையின் அருகே நிற்க முடியாத வெம்மை! ஒவ்வொரு அடியாக நான் எரியும் சிதையை விட்டு முன்னேறுகிறேன்.

என்சோகத்தைத் தீர்க்க எத்தனையோ பேர் அன்பு மழை பொழிந்தாலும் இந்த உலகில் வாழ்ந்த ஒருத்தியின் அன்புக்கு நிகராகுமா? அந்த ஒருத்தி நீ தான்!

ஆம், அம்மா!

நீ தான் அந்த ஒருத்தி!

(யாவும் கற்பனை)

---

### பகவத்கீதை வெண்பா

ஆக்கியோன்: புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, வெளியீட்டோர்: அரசுபதிப்பகம், 231, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு 13. பக்கம் 172. விலை ரூ. 3/50

வேட்கை வெறுப்பற்று மேலாந் தனது சுவ
ஆட்சி வயப்பட்ட ஐம்புலனால்- காட்சி முதல்
சாரும் பொருள் நுகர்ந்தே தன்னடக்கம் பெற்றுளோன்
சேருமே யுள்ளத்தெளிவு

●

சினம் மயக்கஞ் செய்யும் மயக்கத்தாற் சிந்தை
நினைவுத் தடுமாற்றம் நேரும்- நினைவுத்
தடுமாற்றத்தாற் புத்தி சாகு மதனால்
கெடுமாற்ற முண்டாம் நீ கேள்

●

அறிவால் அனுபவத்தால் ஆன் றமைந்த நெஞ்சின்
நிறைவால் அசையா நிலையில் -பொறிபுலன்கள்
வென்று கலவோடுபொன்கல் வேறின்றிக் காண் யோகி
ஒன்றியுறைவோன் பிரமத்துள்

●

தன் மனத்தை வென்றுள்ளே சாந்தி நிலை பெற்றோன்
துன்னுங் குளிர்வெப்பம் இன்ப துன்பம்- இன்னுமுயிர்
மானவ மானம் வரினும் வயங்கு சம
ஞான நிலை நிற்குமே நன்கு

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் வெண்பாவை தெள்ளத்தெளிந்த நீரோடை போல எவ்வளவு சரளமாக கையாளுகிறார் என்பதை இப்பாக்களை படித்துப் பார்த்து தெரிந்துகொள்ளலாம். இப்படி ஒன்றல்ல இரண்டல்ல 277 அருமையான பொன்பாக்கள் இந்நூலிலே உள்ளன.

விஷயமோ மிகப்பெரியது. அந்நாள் முதல் இன்றுவரை மாபெரும் வீரர்கள் முதலாக சாதாரண மனிதர்கள் மட்டில் நம் மனத்திலே ஓரோர் சமயம் கவிந்துகொள்ளும்மாய இருளை போக்கி நமக்கு நமது வாழ்க்கைக்கடமையை உணர்த்தி விருப்பு வெறுப்பற்ற கர்மயோகத்தில் நம்மை ஈடுபடுத்த உள்ளொளி பரப்பி நிற்கும் இதோபதேசம்: இதில், ஞானயோகம், பக்தியோகம், சாங்கியயோகம்என்றெல்லாம் இன்னும் எவ்வளவோ எடுத்துக் கூறி விளக்கி போர்க்களத்தில் சோர்வடைந்து நிற்கும் போர் வீரனுக்கு புது எழுச்சி ஊட்ட வேண்டிய பெரிய பொறுப்பை உடையது. கண்ணன் காட்டிய கடினமான வழி. அடுத்தபடி, பாடுவதற்கு எடுத்துக் கொண்ட யாப்பணியோ புலவர்க்கெல்லாம் என்றறைக்கும் இலகுவில் நயமாகக்கைவரமாட்டாதவெண்பா.

இவ்விரண்டு கடினங்களையும் புலவர்மணி எளிதில் வென்று வியத்தகு சித்தி அடைந்துள்ளார் என்றே கூறலாம்.

கட்மைதனை விட்டுக் கலங்கி நின்ற பார்த்தன்
திடமடையக் கண்ண பிரான் தேற்றி-உடலுயிர்கள்
இத்தகைய; ஞானமிது; யோகமிது என்றுபதே
சித்த பொருள் கீதைதெளிவு

அர்ச்சுனா, இது உன் தவ தருமம். கருமத்தின் தொடக்கம். கருமம் எனப்படுவது செயல். அது காமியம், நிஷ்காமியம் என இரு வகைப்படும். காமிய கருமத்தைச்செய்யும்போது கூடப் பயன் விஷயத்தில் சம புத்திவேண்டும். பயன், கருமத்தைச்செய்வோன் வசத்திலில்லை. அது ஊட்டுவோன் வயத்தது. சமபுத்தியின்றேல் கலக்கம், துக்கம் ஆதியன அதிகரிக்கும். உன் உற்றார் உறவினர் என்போர் யார்? இந்த உடல் என்றைக்கும் அழிந்துபோவது. ஆன்மாவோ அழிவற்றது. அது நாளைக்கே மற்றொரு பிறவி எடுக்கலாம். அப்பொழுது உன் உறவினர், மித்திரர் என்போரை எங்கே தேடுவாய்? ஆகவே, சமபுத்தியுடன் விருப்பு வெறுப்பற்று உன் கடமையைச் செய். அதன் பலனை எண்ணிக் கலங்காதே. காமத்துக்குரிய பலனைத் தனதென்று ஆன்மா சுவீகரிப்பதனால் தான் பந்தம் உண்டாகிறது. பிறவித் தொடர்பு ஏற்படுகிறது. கர்மபலனையிவ்வாறு நாம் சுவீகரிப்பதை விடுத்து அதை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கர்மத்தைச் செய்வது கர்மபந்தத்தைத் தவிர்க்கும் வழியாகும்.

இவ்வாறு தேர்ச் சாரதியாக அமர்ந்திருந்த பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளிய கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்பனவே இந்நூலில் இனிய வெண்பாக்களாகப்பாடப்பெற்றிருக்கின்றன. புலமை ததும்ப பாக்கள் ஒவ்வொன்றும் மணி மணியாக ஒளிர்கின்றன.

சாகித்திய மண்டலத்தாரின் பரிசும் பாராட்டும்பெற்றுள்ள இந்நூல் இப்பொழுது கொழும்பு அரசு வெளியீட்டாரின் பிரசுரமாக அழகிய நூல் வடிவில் வெளிவந்திருக்கிறது. பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உயர் திரு. சுவாமி நடராஜானந்தர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, முன்னாள் அமைச்சர் திரு. க. நடேசன் ஆகியோர் நூலுக்கு சாற்று கவியும் அணிந்துரையும் ஆராய்ச்சி முன்னுரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். விபுலானந்த அடிகளாருக்கு நூல் சமர்ப்பணம் ஆகியிருக்கிறது.

நூலுக்கு முன்னுரை வழங்கிய தமிழ்ப்பேரறிஞர்கள் 'அன்று வெண்பாவிற்புகழேந்தி இன்று பெரியதம்பி' என்றெல்லாம் புலவர்மணியை புகழ்ந்து கொண்டாடியிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்துப் பண்டிதமணியோ இன்னும் ஒருபடி மேலே போய் பாட்டுக்கொரு புலவன் பாரதியல்ல இவர் தான் என்றேசொல்லிவிட்டார். இதனால், மட்டக்களப்பு புலவர்மணியிடத்தும், சுப்பிரமணிய பாரதியாரிடத்தும் கூடத்தான், யாழ்ப்பாணத்துப் பண்டிதமணிக்கு உள்ள ஈடுபாடும், அவர்கள் பால் உள்ள பிரேமையும் புலப்படுகின்றன. அநேகமாய் 25 ஆண்டுகளுக்கு முன்னே யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு மாணவர் விழாவின் போது சிறுவர் முன்னால் நின்று அவர் தன்னை மறந்த லயத்தினராய் தீராத விளையாட்டுப்பிள்ளை என்ற பாரதி பாடலுக்கு அபிநயம் பிடித்துப் பாடியதையும் பேசியதையும் கதை சொன்னதையும் அன்று கேட்டவர்கள், அதற்குள்ளே மறந்து போய் விடுவார்களா என்ன?

—எம்.

★

**பூதத்தம்பி:** (வரலாற்றுநாடகம்) ஆசிரியர்: த. சண்முகசுந்தரம், வெளியீடு: வித்துவான் கணேசையர் தமிழ்ச் சங்கம், மாவிட்டபுரம், விலை ரூ 1.00.

யாழ்ப்பாணத்துவரலாற்றில் இடம்பெறுபவரானபூதத்தம்பி முதலியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இந்நாடகம், யாழ்ப்பாண வைபவ மாலை, தாவுதுப்புலவர் இயற்றிய பூதத்தம்பி விலாசம் (நாடக நூல்) பூதத்தம்பிக் கோட்டை (நவீனம்) முதலான நூல்களின் ஆதாரப்பலத்துடன் புனையப்பட்டது. "இந்நாடக நாயகரான பூதத்தம்பி நீதிமான், பக்திமான், மதிப்பிற்குரியவர். இப்படிப்பட்டவருக்கு நேர்ந்ததை நினைக்குந்தோறும் நெஞ்சம்வெந்து சாம்பராகின்றது." பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். இந்த நாடகத்தினை வாசிப்போரின் இதயம் அன்னார் குறிப்பிடுவதுபோல மெய்ப்பாட்டுணர்ச்சியைத்தொடக்கூடியவகையில் நாடகக்கதை அமைந்துள்ளது.

# நமது நூல் நிலையம்

சரித்திர மூலஆதாரங்களைப் பிறழவிடாமலும் மூல நாடகங்களில் விரவிய மூடப்பழக்கவழக்கக்கொள்கைகள் இந்நாடகத்தில் விரவாமலும் எச்சரிக்கையோடும் காலத்தின் மாற்ற நிலையை உணர்ந்தும் ஆசிரியர் உருவாக்கியுள்ளார். இதனால் கோணல் பார்வை கொண்டவர்களின் கண்டனக்கணைக்கு இலக்காகாது தப்பிவிட்டார் என்றால் மிகையில்லை.

இந்நாடகத்தில் பூதத்தம்பி அபிராம், அன்ரணி, அந்திராசி, அழகவல்லி, புதுநாயகவல்லி, வன்னித்தம்பி, சின்னலாந்தேசு ஆகியமுக்கிய பாத்திரங்களைச் சந்திக்கின்றோம். இவர்கள் சரித்திரத்தின் எல்லைக்குள் அமைந்தவர்கள். ஆனால் நாடகத்தின் சிறப்புக்குப் புதிய பாத்திர சிருஷ்டிகள் அவசியமென்பதை உணர்ந்து கபூர், யேசன் ஆகிய பாத்திரங்களை கற்பனையால் உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர். அப்பாத்திரங்கள் இரண்டும் நாடக இயக்கத்திற்கு வலுவான அம்சமாக உதவியுள்ளன.

நேர்மையையும் நல்ல பண்பையும் உண்மையையும் துலக்குவதற்கு சாட்சியாக யேசன் தோன்றுகிறான். எவ்விடத்தும் தன் இனத்தையும்,மதத்தையும் காட்டிக் கொடுக்காத கபூர், இருவரும் நல்ல படிப்பினையை ஊட்டுகிறார்கள். இன்றையகாலகட்டத்திற்கு தேவையானஉணர்வூட்டும்வசனங்களை இந்நாடகத்தின் ஒரு சில இடங்களிற் காண்கிறோம். பொறாமையும், வஞ்சகமும், சுயநலமும் உருண்டு திரண்ட அந்திராசி முதலியின் கொடுமையினூடே தாய்நாட்டின் பற்றும் பக்தியும் கொண்ட பூதத்தம்பியின் நல்ல இதயத்தை வெளிக்காட்டும் கருத்துள்ள வசனங்கள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

"யாழ்ப்பாணத்திலே பூதத்தம்பி முதலியார் இருக்கின்றார். தொண்டுசெய்தல் யாழ்ப்பாணத்து அரசனுக்கு, இல்லாவிடில் மன்னைக்கிண்டி வாழலாம் என்று இருக்கின்றார். அவர் பெருந்தகை. அவரைப்போல் நானும் என் இனத்தைமதித்துநடந்தால்..." கபூரின் வாயினால் பூதத்தம்பியின் பெருமையை வெளிக்காட்டி பூதத்தம்பி என்ற பாத்திரம்மேடைக்கு தோன்று முன்பே அதன் பெருமையை ஆசிரியர் வெளிக்கொண்டுவர முயல்வது அவசியமா என்பது நமது கேள்வி. கதாநாயகனின் பெருமையை கூறுவதற்குசுசகமான நடவடிக்கையாக இதனை மேற்கொண்டார் போலும். இது இயற்கையான முறையில் வசனம் முனைகொள்ளாத தன்மையைப் புலப்படுத்துவது போலமைகிறது.

"ஒன்று சொல்ல மறந்துவிட்டீர்கள். இரகுவமிசம் கையிலிருந்தால் கவலையெல்லாம் காற்றாய்ப் பறந்தோடிவிடும் என்பீர்கள்". — அழகவல்லி

"உண்மை, உண்மை, இப்போது நான் இரகுவமிசத்திற்கு அகல உரை எழுதிக் கொண்டிருக்கின்றேன். நேற்று அருமையான பாட்டு ஒன்றிற்கு நூதன உரைகண்டேன்."

— பூதத்தம்பி

"தங்காய் எனக்குஒருஉதவி; வீட்டிற்கு ஆளனுப்பி இரகுவமிச ஏட்டுக்கட்டை எடுப்பி."

— பூதத்தம்பி

"புல்லாகிப் பூடாகி என்பது எங்கள் திருமலை கண்ட உண்மை. மரமாக நான் பிறந்தால் நல்லூரானின் கோவில் வீதியிலுள்ள மரமாக இருக்க வேண்டும். புழுவானாலும் இராமபாணமாகப் பிறந்து இரகுவமிச ஏட்டுக்கட்டிற் புகுந்து அதனை அரிக்கவேண்டும்." — பூதத்தம்பி

இத்தகைய வசனங்கள்மூலம் இரகுவமிசத்தில் பூதத்தம்பி

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தைமீ 4உ. (17-1-65)

# செனேட்டர் நடேசபிள்ளை

சைவசித்தாந்தச் செம்மல் செனேட்டர் நடேசபிள்ளையவர்கள் காலமானது தமிழ் கூறும் நல்லுலகுக்கும் சிறப்பாக ஈழத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

தமிழகத்திலே பிறந்து ஈழத்துக்காக வாழ்ந்தார் பிள்ளையவர்கள். இருநாடுகளுக்கும் ஓர் உயிர்ப்பாலமாக விளங்கினர். ஈழத்தின் முடிசூடா மன்னராகப் பொலிந்த சேர் பொன்னம்பலம் இராமநாதர் தம் அருமை மருகராக அவரைத் தெரிவு செய்தாரெனின், அவரது சிறப்பைப் பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை.

தமிழ்ப்பண்பாடு, சைவத்தின் மாண்பு இவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டுப் போல் வாழ்ந்து, ஈழத்தின் அரசியல், கல்வி, கலாச்சாரம் முதலிய பல்வேறு துறைகளிலே சிறப்பான தொண்டாற்றினர்.

ஆசார ஒழுக்கசீலர்; சிவபூஜாதுரந்தரர்: பெருமை மிக்க தமது மாமனுர் விட்டுச்சென்ற பல பணிகளையும் அவர் தொடர்ந்து செய்தார். ஸ்ரீஇராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி இவற்றின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். தமிழகத்திலிருந்து சிறந்த இசைக்கலைஞரை, தடைகள் மிக்க இக்காலத்திலும் அழைத்துவந்து, இசைக்கலையில் நம் பெண்குலத்துக்கு மேலான பயிற்சி அளிக்கவும் வேண்டிய ஒழுங்குகள் செய்தது நன்றியுடன் பாராட்டத்தக்கதாகும்:

ஈழத்தமிழகத்தின் இரு கண்மணிகள் போன்ற இவ்விரு கல்லூரிகளும் அரசாங்கத்துக்குக் கைமாறிய பின்பும், அவற்றை மூலஸ்தானமாகக் கொண்டு இராமநாதன் பல்கலைக் கழகத்தை அமைக்க அவர் எவ்வளவோ ஆவல்கொண்டு, பல பல முயற்சிகளெடுத்தார். செனேட்டராக அவர் சம்மதித்ததும் இந்த நோக்கத்தைக் கொண்டுதான் என்பது பகிரங்க ரகசியம். இந்த ஆவல் பூர்த்தியான பின் அவர் மறைந்திருப்பின், அவர் ஆத்மா சாந்தியடைந்திருக்கும். நம் துரதிருஷ்டம் இதுவரை அது முடியாமற் போயிற்று.

தனிச்சிங்களத் தீர்மானத்தை களனி மகாநாட்டிலே ஐக்கிய தேசியக்கட்சி நிறைவேற்றியபோது, திரு. பிள்ளையவர்கள், அக்கட்சியிலிருந்து விலகியதுடன், மந்திரிப் பதவியையும் உதறித் தள்ளினர். அவர் அச்சமயம், பார்லிமெண்ட்சபையிலே செய்த உணர்ச்சிமிக்க பிரசங்கம் ஈழத்துச் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பதியத்தக்கதாகும். அவரது நல்ல யோசனைக்குச் செவிசாய்த்திருப்பின், ஐக்கிய தேசியக்கட்சியின் நிலையும், ஈழத்து அரசியலும் வேறுவிதமாக இருந்திருக்கும்.

தம் வாழ்க்கைத் துணைவியாரை இழந்தபின் சில மாதங்களே அவர் வாழ முடிந்தது. இதிலிருந்து அந்தப் பிரிவு எவ்வளவு அவரைப் பாதித்ததென்பது விளங்கும். இருவரும் இங்கு வாழ்ந்தபோது சைவத்துக்கும் தமிழுக்கும் தமிழருக்கும் பல துறைகளில் மேலான தொண்டாற்றினர். அத்தொண்டினை மேன்மேலும் செய்து, அவர்களது எண்ணங்கள் பூர்த்தியடைய நாம் கூடுமானதைச் செய்வதுதான் அவ்விருவரின் ஆன்மாக்களும் சாந்தி அடைய வழியாகும். ஈழம் உள்ளிட்டு தமிழ் கூறும் நல்லுலகனைத்தும் அவர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

## தேர்தல் வதந்திகள்

● சில தொகுதிகளில் சிங்கள பௌத்த வாக்குகளைப் பிரித்து யூ. என். பி க்கு அப் பகுதிகளில் வெற்றி கிடைக்கச் செய்வதற்காக பிலிப் குணவர்த்தன, கே. எம். பி. ராஜரத்தின ஆகியோரின் எம். ஈ. பி., ஜே. வி. பி. கூட்டு முன்னணி அபேட்சகர்களை நிறுத்தியுள்ளதாம். மும்முனைப் போட்டியுள்ள தொகுதிகளில் யூ. என். பி.க்கு ஆதரவாகவே அபேட்சகர் நிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

● யு என். பி. ஆட்சிக்கு வந்தால் முன்னுள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸ்நாயக கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்படுவார் என்று அவருக்கு யு என், பி. வாக்குறுதியளித்திருக்கிறதாம்.

● ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் நுழைந்து அதன் சார்பில் போட்டியிடுவதில் லங்கா சமசமாஜக் கட்சியினர் சிலர் வெற்றிபெற்றுள்ளனராம். அவர்களில் ஒருவர்தான் அவிசாவளையில் சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திருமதி சோமா விக்கிரமநாயக்கா என்று சொல்லப்படுகிறது.

● யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் தான் பிரதமராக லாம் என்ற ஆசையில் டெடிகமயில் திரு. டட்லி சேனநாயக்கா தோல்வியடையச் செய்வதில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இரகசியமாக வேலைசெய்கிருராம்.

● திட்டப்படி கட்சிவெற்றிபெற்றிருல் யு. என். பி. அரசாங்கத்தில் திருவாளர்கள் பிலிப் குணவர்த்தன, ராஜரத்தின. சி பி. டி. சில்வா, அசோகா கருணாரத்தின ஆகியோருக்கு மந்திரிப்பதவிகள் கிடைக்குமாம்.

# திருவையாறு தந்த இசைச் செல்வம் - ஸ்ரீ தியாகராசர்

மேலை நாட்டு இசைக்கு ஜேர்மனி எத்தனை புகழ் உடையதோ அத்தகைய சிறப்பு கர்நாடக இசைக்கு தஞ்சாவூரில் கிடைத்துள்ளது. தேவாரத்தை இசைக்க இறைவனிடம் அருள்பெற்ற ஞானக்குழந்தையான ஞானசம்பந்தர் அவதரித்த புண்ணிய பூமி அது.

ஒரே வர்ண மெட்டில் பல சாகித்ரியங்கள் இருந்த காலத்தில் ஒவ்வொரு பாட்டும் தனித் தனி வர்ணமெட்டில் அமைக்க வழிகாட்டியவர் திருவையாறு தந்த தியாகராஜ சுவாமிகள். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜர் கர்நாடக சங்கீதத்திற்கு அளித்த சிறப்பு சொல்லில் அடங்கா.

இசைச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய சாகித்தியங்களை இயற்றி உண்மையான கர்நாடக சங்கீதத்திற்கு புதிய விழிப்பும், உயர்ச்சியும் அளித்தவர் ஸ்ரீ தியாகராஜர்.

திருவாரூரில் கிரிராஜகவி மரபில் வந்தவர் தியாகராஜர். 14 வயதில் கிராமந்தம் அத்தியயனம், காவிய நாடகாலங்காரம் என்பனவற்றில் பாண்டியத்தியம் பெற்றர். அரண்மனை வித்துவான் சொண்டி வெங்கடரமண ஐயாவிடம் சங்கீதம் கற்கத் தொடங்கி குறுகிய காலத்தில் சங்கீத இலக்கணம், ராகாலாபனம், பல்லவி என்பனவற்றில் திறமைபெற்றவரானர்.

ஒரு முதியவரிடம் ஸ்ரீ ராம நாம மந்திர உபதேசம் பெற்ற இவர் முதன் முதலில் இராம தரிசனம் பெற்று ஸ்ரீஇராமனைத் துதித்து முதன் முதலாக 'பாலகனமய' என்ற கீர்த்தனையை அடாண ராகத்தில் ஆரம்பித்துப்பாடினர். 'ராம நின்னே' போன்ற கீர்த்தனைகளைத் தெலுங்கில் இயற்றினர்.

தஞ்சை சரபோஜி மகாராஜா சுவாமிகளைக் காண விரும்பி தூதுவர்களை அனுப்பியதாகவும் அதனைத் தியாகராஜர் ஏற்றுக்கொள்ள மறுத்ததாகவும் கதை உண்டு.

'ஸ்வரார்வணம்' என்ற சங்கீத இலக்கண கிரந்தம் நாரத முனிவரால் தியாகராஜருக்கு வழங்கப்பட்டதாகவும் கூறுவர். 'நாரதகானலோலா' என்ற பாடல் இச்சமயத்திலேயே எழுந்தது. அபூர்வமான பல ராகங்களையும்கண்டு பிடித்தார். அற்புதமான ராகங்கள் பலவற்றினை வெளிப்படுத்தி அநேக அபூர்வராகங்களிலும், மேளகர்த்தாராகங்களிலும் சங்கீத இலக்கணம் தவருமல் பக்தி மார்க்கங்களுக்கு உதவி புரிந்தார்.

ஒவ்வொரு பாடலும் தனித் தனி வர்ணமெட்டில் அமைக்க வேண்டுமென்றவிருப்பம் மிக்கவரான தியாகராஜர் இத் துறையில் பல பாட்லகளை இயற்றினர். இதனுல் நாத ரசனை அதிகரிக்க ராகங்களின் பூரண வடிவங்கள் வெளிப்பட்டன. 'கிருதி' என்னும் உருப்படிக்கு தியாகராஜரும், முத்துசாமி தீட்சிதரும் சியாமா சாஸ்திரிகளும் தான் மூலகர்த்தாக்கள் எனின் அது மிகையன்று.

ஜய ஜய ராமா, திவ்விய நாம கீர்த்தனம், உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனம், பிரகலாத பக்தி விஜயம், நௌகா சரித்திரம் என்ற உருப்படிகளும் ஸ்ரீ தியாகராஜருக்குப்பெருமை தேடித்தந்தன.

நாத உபாசனையால் முத்தி யடையலாம் என்பதனை உலகுக்குணர்த்தியவர் ஸ்ரீதியாகராஜர். இவர் தமது வாழ்வின் பெரும்பகுதியை திருவையாற்றிலே உள்ள தமது புராதன இல்லத்திலே கழித்தார். ஸ்ரீராமனின் திருவடியை உள்ளத்தில் நிறுத்தியதோடு அமையாது, அவருடைய விக்கிரகத்தை வைத்துப் பூசிப்பதிலும் பஜனை செய்வதிலும் பெருவிருப்புள்ளவராகக் காணப்பட்டார். ஸ்ரீராமனின் அருள்தான் அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்களின் போதெல்லாம் உறுதுணையாகவிருந்தது. இவரது பாடல்கள் யாவும் ஸ்ரீராமனின் திருவடிங்களே. ஆயிரக்கணக்கான கிருதிகளை இவர் இயற்றியுள்ளபோதிலும் இப்போது சுமார் 600 கிருதிகளே உள்ளன.

116 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீராமனுடன் இரண்டறக் கலந்தவர் ஸ்ரீதியாகராஜர். பலர் முன்னிலையில் சந்நியாசம் வாங்கிய தியாகராஜர் மறு தினமே குறித்த நேரத்தில் ஸ்ரீராமனுடன் இரண்டறக் கலந்தார்.

ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் பகுள பஞ்சமியன்று இவரின் நினைவாக தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தியாகப் பிரம்ம மகோற்சவம் கொண்டாடப்பட்டுவருகிறது.

இவ்வாண்டும் யாழ்ப்பாணத்து கல்லூரியில் இந்த உற்சவம்சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கின்றது.

திருவையாற்றில் காவேரிக் கரையில் தியாகையர் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. தியாகையருக்கு உறைவிடமாக இருந்து இராமபக்தி வளர்ந்து இசையோடு கலந்ததான இப் புண்ணிய பூமியில் இவ்வுற்சவம் மிகவும் கோலாகலமாக மூன்று தினங்கள் நடத்தப்படுகிறது.

கர்நாடக சங்கீதத்துறையில் புதிய வேகமும் உணர்வும் காணப்படும் இந்த நாளில் நாமும் இச்சங்கீதத்திற்கு உயர்வுதேடித்தந்தஸ்ரீ தியாகையரை நினைவு கூரவேண்டியது அவசியமே. இதேபோன்று ஏனைய சங்கீத மேதைகளையும் நினைவுகூர்ந்து கர்நாடக சங்கீதம் வளம்பெருக்கி மேலும் உயர நாமும் உழைப்போமென உறுதிபூணுவோம். இவ்வாண்டு பகுள பஞ்சமி இம் மாதம் 22-ம்திகதி வருகிறது.

— என் கே. பத்மநாதன்

## நமது நூல் நிலையம்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அத்துமீறிய அபிமானத்தையும், மொழி ஆர்வத்தையும், தேசிய நோக்கத்தையும் வெளிக்கொண்டுவருகிஞர். அடிக்கடி இரகுவமிசமே வருவதன் நோக்கமென்ன? ஏனைய தமிழ் இலக்கிய நூல்களில் பூதத்தம்பிக்கு ஆர்வமோ ஆசையோ இல்லையா? என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. இரகுவமிசம் பாராட்டப்பட வேண்டியதானுலும், அதற்கு வலிந்து முக்கியத்துவம் கொடுப்பதைத்தடுத்து இயற்கையாக அவ்வார்வத்தைத் தூண்டியிருக்கலாம்.

"தொல்லை வினைகடிந்து
தோன்றுத் துணைபுரிந்து
சொல்லின் நிலைகடந்து
தொண்டர் மனம் நயந்து
நல்ல தமிழ் விழைந்து
ஞானம் தனை அளித்து
நல்லை நகர் உறையும்
செல்வா! குகா! சண்முகா!"

இவ்வகைப் பாடல்கள் ஆசிரியரின் கவிதா ஞானத்துக்கும், பக்தி உணர்வுக்கும் எடுத்துக்காட்டாகவும் நாடகத்துக்கு சுவை பயப்பனவாகவும் அமைந்துள்ளன.

சரித்திரத்தின் சுவடிக்குள் மறைந்து கிடக்கும் தமிழர்களின் சீரிய பண்பை, நேர்மையை, மாருத நாட்டுப் பற்றை, பரந்த சீலப் பண்பாட்டை இந்நாடகம் உலகறிய வெளிக் கொண்டுவந்துள்ளது. இருந்தும் இவ்வகை நாடகங்கள் விரிவாகவும், அக்காலத்து வாழ்க்கை உண்மைகளை தெளிவாக விளக்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். 74 பக்கங்களுக்குள் இந்த [illegible] விரிக்கவேமுடியாது. ஆனால் [illegible]

# இந்துப் பெரியார் சேர் பொன். அருணசலம்

ஈழநாட்டின் அரியதவப் புதல்வர் சேர். பொன் அருணசலம். அவர் அமரராகி 41 ஆண்டுகள் சென்றுவிட்டன. இக் கட்டுரையில் அவர் இந்து சமயத்துக்கு என்ன சேவை செய்தார் என்பதை மட்டிலும் சுருக்கமாக ஆராய்வோம்.

அருணசலம் அவர்கள் ஞாபகத்தை முகத்துவாரத்திலே உள்ள அருணசலேஸ்வரர் சிவன்கோவில் நினைவூட்டுகிறது. அப்பெரியார் இந்துசமயத்தில் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்க விரும்பினர். கொழும்பிலே கறுவாக்காட்டில், ஓர் 'ஆச்சிரமம்' தாபிக்க எண்ணினர். ஏனெனில் அவர் தமிழர்கள் பிறநாட்டுக்கலாச்சாரங்களிலும் பிறநாட்டுமதங்களிலும் பெரிதும் ஈடுபட்டுவருவதைக் கவனித்ததனுலேயே என்க.

அந்த இந்து ஆச்சிரமத்தில் பல இந்துக்கள் ஒன்றுகூடி, உரையாடல், பிரசங்கங்கள், வகுப்புகள், பஜனைகள், நடத்த வாய்ப்பு அளிக்கும் என சிந்தித்தார். எங்கள் இந்துமகத்தில் உள்ள தத்துவம், தமிழ் இலக்கியம், இசை, சித்திரத்தையும் எளிய வாழ்க்கையையும், தன்னடக்கம் முதலிய பெரிய இலட்சியங்களையும் வளர்த்து, லௌகீகமாகிய விடத்துக்கு மாற்று மருந்தாக இருக்கும் என அவர் நம்பினர். அந்த ஆச்சிரமத்திலே விவேகானந்த சபை, சைவபரிபாலன சபை முதலியோர் செய்யும் ஆக்கப் பணிகளைப் புரியலாம் எனவும்கருதினர். இந்துப்பண்பாட்டை வளர்ப்பதற்கு ஒவ்வொரு நகரிலும் இத்தகைய ஆச்சிரமங்களை வளர்த்தல் நன்று என எண்ணினர். இந்த ஆச்சிரமம் முதலில் வாடகை இல்லத்தில் தோன்றியது.

உதாரணமாக இப்படியான ஆச்சிரமம் கதிர்காமத்திற்குப் போகும் யாத்திரிகர்களுக்கு மிகவும் பயன்படத் தக்கதாக அமைதல் நலம். உண்மையாக இது பல இந்து சங்கங்கள் ஐக்கியமாக ஆற்ற வேண்டிய பணி. மேலும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பல இந்துக்கள் சேருவார்கள். அவர்களுடைய நன்மையை நாடுவதற்கு இந்த ஆச்சிரமம் மத்திய அலுவலகமாக இருக்கலாம்.

அவர் "ஞான வசிஷ்டம்" என்னும் நூலை மொழிபெயர்த்துள்ளார். தாயுமானவர்

(5-ம் பக்கம் பார்க்க)

றத்தால் தம்மைமறந்த மக்கள்-முந்தியவர்கள், உயரிய வாழ்வை ஒரு சில பொழுது எண்ணுவதற்குரிய கருவியாக இந்த நாடகம் அமைந்திருப்பதை படித்தறிந்து பாராட்டுவ செய்வர்.

இ—நா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

டி. எம். எம்

# தேர்தல் வருகிறது !

## தேர்தல் காற்று

புயலுக்கும், பொங்கலுக்கும் பின் இப்போது நம்மை ஆட்கொண்டிருப்பது தேர்தல் பேய். பதைரப்பட்டவர்களின் மனதிலும் இந்தச் சைத்தான் முழுமையாகக் குடிகொண்டிருப்பதால் அதற்குப்பேயென்ற பெயரே பொருந்தும். அரசியலில் உற்சாகமான பகுதி தேர்தலே. எப்போதும், அரசியல்மந்தமாருதமாய் இருப்பதில்லை. குறிப்பாக அதன் ஒரு பகுதியானதேர்தல், நிச்சயம் சண்டமாருதமே.

இன்னும் 9 வாரங்களில், மார்ச் 22-ம் திகதி) சுதந்திர இலங்கையின் 6-வது பார்லிமெண்டுக்கான பொதுத்தேர்தல் வருகிறது.

சென்ற பார்லிமெண்டில் 75 ஸ்தானங்கள் பெற்றிருந்த ஆளும்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இம்முறை 100 தொகுதிகளில் போட்டியிடுகிறது. 30 ஸ்தானங்கள் பெற்றிருந்த ஐக்கிய தேசியக்கட்சி 116 தொகுதிகளில் போட்டியிடுகிறது. 12 ஸ்தானங்களைக் கொண்டிருந்த லங்கா சமசமாஜக்கட்சி 24 தொகுதிகளிலும், திரு. வி பி. டி' சில்வாவின் ஸ்ரீ லங்கா சுதந்திர சோஷலிஸ்ட்கட்சி 82 ஸ்தானங்களிலும் (இதில் சஹநாயக்கா கட்சியினர் 2 பேர்), சென்ற பார்லிமெண்டில் 16 ஸ்தானங்கள் பெற்றிருந்த சமஷ்டிக் கட்சி 20 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

மக்கள் ஐக்கிய முன்னணி (5 ஜாதிக விமுக்தி பெரமுனைக் காரர்களுடன்) 70 தொகுதிகளில் போட்டியிடுகிறது. சென்ற பார்லிமெண்டில் அது பெற்றிருந்த ஸ்தானங்கள் 5 மட்டுமே.

தமிழ்க்காங்கிரஸ் 15 தொகுதிகளில் நிற்கிறது: கௌமன் (கம்யூனிஸ்ட்) கட்சி 9 தொகுதிகளிலும், ஐக்கிய இடதுசாரி முன்னணி 2 தொகுதிகளிலும், சுந்தரலிங்கக்கட்சி 2 தொகுதிகளிலும், வலதுசாரி லங்கா சமசமாஜக்கட்சி 4 தொகுதிகளிலும், சண்முகதாசன் (கம்யூனிஸ்ட்) பிரிவினர் 2 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றனர். எந்தக்கட்சியிலும் சேராத பக்கியசாலிகளான சுயேச்சைகள் 96 பேர்.

அதாவது மொத்தம் 151 ஸ்தானங்களுக்கு 492 பேர் போட்டியிடுகின்றனர். இவையெல்லாம் அனைவருக்கும் தெரிந்த விஷயங்களே. எனினும் இவற்றை மீண்டும் கேட்பதிலும், பார்ப்பதிலும் பலருக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை என்பதற்காகவே ஓரளவு தெரிந்தும், தெரியாததுமான வேறு சில விஷயங்களையும் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.

★

## 100 அதிகம்

தேர்தலில் போட்டியிடும் ஆவல் நம்மிடையே நாளுக்கு நாள் அதிகமாகியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் 398 பேர் போட்டியிட்டனர். வரப்போகும் தேர்தலில் இதைவிடசுமார் 100 பேர் அதிகமாகப் போட்டியிடுகிறார்கள் என்பதே இதற்கு உதாரணம்.

இன்னொரு ரசமான விஷயம். சென்ற தேர்தலில் 75 ஸ்தானங்கள் பெற்று ஆட்சிக்குவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு வாக்களித்தவர்கள் 10, 22, 154 பேர் ஆகும், ஆனால் நேரடிப் போட்டியில் தோல்வியுற்ற யு. என். பி. க்கு கிடைத்த வாக்குகளோ 11, 43, 290. அதாவது 1, 21, 136 அதிக வாக்குகள் தோற்றகட்சிக்கு கிடைத்தன! ஜனநாயக அரசியலமைப்பில் இப்படி நடப்பது அதிசயமான விஷயமல்ல.

இலங்கையின் ஜனத்தொகை 1, 06 44, 809. இது 1963-ம் ஆண்டுக்கணக்கு. வாக்காளர் தொகை 47,63, 090. கொழும்பு தெற்கில் போட்டியின்றி இரு அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டதால் 93, 468 வாக்காளர்கள் ஏற்கனவே தங்கள் வாக்குகளை உபயோகப்படுத்திவிட்டார்கள்.

★

## 60 தமிழ் அபேட்சகர்கள்

வகுப்பு அடிப்படையில் சில புள்ளிவிபரங்கள்: வரப்போகும் தேர்தலில் 405 சிங்கள அபேட்சகர்களும், 60 தமிழ் அபேட்சகர்களும் போட்டியிடுகிறார்கள். முஸ்லிம் அபேட்சகர்கள் 29 பேர். பறங்கியர் கௌமன் ஒருவரே.

60 தமிழ் அபேட்சகர்களில் 56 பேர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுகின்றனர். கொழும்புமத்தியில் 3 தமிழரும், நுவரெலியாவில் ஒரு தமிழரும் ஆக 4 தமிழர்கள் மட்டுமே சிங்களப் பகுதியில் போட்டியிடுகின்றனர். சின ஆதரவு சண்முகதாசன், சமசமாஜ வலதுசாரி பாலாம் புத ஆகியோரும், மற்றும் இரண்டு சுயேச்சைகளுமே அவர்கள்.

தமிழ்ப் பகுதியில் 11 சிங்கள அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். வவுனியாவில் 5 பேர், திருமலையில் ஒருவர், மூதூரில் 3 பேர், பட்டிருப்பில் 3 பேர், பொத்துவிலில் ஒருவர்.

★

## தொகுதிகள்

கொழும்பு மத்திய தொகுதியே நாட்டின் மிகப் பெரிய தொகுதி இங்கு வாக்காளர் எண்ணிக்கை 93, 468, போட்டியிடுபவர்கள் 10 பேர்.

நாட்டின் மிகச்சிறிய தொகுதி மிகிந்தலை. இங்கு வாக்காளர் எண்ணிக்கை 13,597: இங்கு 3 பேர்போட்டியிடுகிறார்கள்

கொழும்பு மத்திய தொகுதி 3 அங்கத்தவர் தொகுதி: கொழும்பு தெற்கு, அக்குறணை, மட்டக்களப்பு, மூதூர் ஆகியன இரட்டை அங்கத்தவர் தொகுதிகள்.

கொழும்பு மத்திய தொகுதியில் 10 பேர் போட்டியிடுகிறார்கள் என ஏற்கனவே சொன்னோம். அடுத்து, கிளிகொச்சி, மிருவாங்கொடை, கொலன்னாவ ஆகிய ஒற்றை அங்கத்தவர்கள் தொகுதியில் தலா 7 பேரும் இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் 7 பேரும் போட்டியிகிறார்கள். பொத்துவில், புலத்சிங்கள, சொர்ணதோட்டை ஆகிய ஒற்றை அங்கத்தவர் தொகுதியில் தலா 6 பேரும், மூதூர் இரட்டை அங்கத்தினர் தொகுதியில் 6 பேரும் போட்டியிடுகின்றனர்.

★

## ஜெயக் கொடிகள்

பருத்தித்துறைப் பகுதியில் கம்யூனிஸ்ட் அபேட்சகர் மோதினால் கேகு, புகழ்பெற்ற ஒரு செல்வந்தரின் பெருமுடன் விளங்குகிறார்!

4 ஜெயக்கொடிகள் வருகிற தேர்தலில் போட்டியிடுகிறார்கள். திவுலபிட்டிய தொகுதியில் 3 சிங்கள ஜயக்கொடிகளும், உடுப்பிட்டியில் ஒரு தமிழ் ஜெயக்கொடியும் போட்டியிடுகிறார்கள். நாலில் ஒருவராவது ஜெயக்கொடிநாட்டுவார் என்பது நிச்சயம்.

நமது தேர்தல்களில் சில விஷயங்கள் பொதுவானவை. அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்குமிடையேயான உறவு ஒருவிதம். எம். பி. க்களுக்கும் பொதுமக்களுக்குமிடையேயுள்ள உறவு வேறுவிதம். அபேட்சா பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட காலம் முதல், வாக்களிப்பு காலம் வரை அபேட்சகர் வாக்காளர்களுக்கு அடிமையாய் இருக்கிறார். தேர்தலுக்குப்பின் எம். பி. யாக வந்தால், அபேட்சகருக்கு மக்கள் அடிமையாகிவிடுகிறார்கள். ஐந்து வருடங்களுக்கொருமுறை மட்டுமே நமக்கு உடல், பொருள், ஆவியைக் கொடுக்க எம். பி. க்கள் முன்வருவது ஜனநாயகம் அனுமதித்திருக்கும் ஒரு சலுகை. அல்லது ஜனநாயகத்தின் பலவீனம்!

கொள்கை அல்லது கட்சியையக்கைவிட்டு தனிப்பட்டவர்களுக்காக வாக்களிக்கும் இயல்பும் நமக்குண்டு.

★

## வால் நட்சத்திரங்கள்

"அரசியல் வாதிகள் வானத்தில் தோன்றும் வால் நட்சத்திரத்தைப் போன்றவர்கள். தேர்தல் காலத்தில் அவர்கள் மக்களுக்கு இனிப்பான வாக்குறுதி அளிப்பார்கள். பின் வால் நட்சத்திரத்தைப்போல இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிடுவார்கள்" என்றார் விஞ்ஞானி ராமன். ஒரு கட்சி, அரசாங்கம் அமைத்தபின், மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையேயான தொடர்பு சிறிதுகாலத்தில் குறைந்துவிடுகிறது. இதற்கு இரு சாரருமே காரணம்.

அபேட்சகர்களைப் போலவே தேர்தல்காலத்தில் வாக்காளர்களும் சுறுசுறுப்புக்காட்டுகிறார்கள். பார்லிமெண்டில் ஒரு கட்சிக்கு அதிகாரத்தை அளித்துவிட்டு அவர்களும் உற்சாகம் குறைந்துவிடுகிறார்கள்.

★

## அரசியல் வளர்ச்சி

1910-ம் ஆண்டுமுதல் 1931-ம் ஆண்டுவரை கல்வி கற்ற மக்களுக்கே இந்த நாட்டில் வாக்குரிமை இருந்தது.

1931-ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டப்படி இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அரசாங்க சபைக்கு இரு தேர்தல்களும் நடத்தப்பட்டன.

1947-ம் ஆண்டு சோல்பரி பிரபு இலங்கை வந்தார். சோல்பரி திட்டப்படி நாட்டில் செனட்சபையும், ஜனப்பிரதிநிதிகள் சபையும் அமைக்கப்பட்டன. இத் தேர்தல் மூலம் முதல்ாவது பிரதமராக திரு. டி. எஸ். சேனநாயகாபதவிக்கு வந்தார். [illegible] யூ. என். பி. கட்சி தொடர்ச்சியாகப் பல தேர்தல்களில் பதவி வகித்தது. இந்த 8 ஆண்டுக் காலத்தைத்தான் நமது பிரதமர் ஸ்ரீமதிபண்டாரநாயகா 'முதலாளித்துவ சகாப்தம்' எனக் குறிப்பிட்டார். ஆனால் இது வகுப்புவாத முதலாளித்துவமாய் இல்லாமல் தேசிய முதலாளித்துவமாய் இருந்ததால் நாட்டில் அமைதி இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

1956-ம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் ஆட்சி, அல்லது மறுமலர்ச்சி, அல்லது சோஷலிஸ நடுவழிப்பாதைக்கு திரு. பண்டாரநாயகா தலைமை தாங்கினார். ஆனால் புதிய உத்வேகத்தில் அது வகுப்புவாத சக்தியாக உருவெடுத்தது. சோஷலிஸப் பொருளாதாரத்துக்கான பலநடவடிக்கைகள் பின்னைய 8 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை பல சர்வதேச விவகாரங்களில் கலந்துகொண்டது. எனினும் வகுப்பு அடிப்படையில் பௌத்தம், கலாச்சாரம், மொழி ஆகிய விஷயங்களை புதிய சகாப்தம் முன்னணிக்குக் கொண்டுவந்தது. இதனால் வகுப்பு ஒற்றுமைக்குச் சேதம் ஏற்பட்டது. உண்மையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது பெரும் முட்டுக்கட்டையாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் எந்த அரசாங்கமும, தேசிய அரசாங்கமாக இயங்கப்பட்டாலே மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.

---

# ராஜ் நாடக மன்றத்தாரின் உதவி நிதி நாடகம்

## "ஈழநாடு" புயல் நிவாரண நிதிக்காக நடத்தப்பட்டது

'அவமானம்' ஏற்கனவே பலமுறை மேடை ஏறிய நாடகம். இருந்தும் கூட ஏராளமானோர் வந்து 'நான் ஒரு கவர்மெண்டு ஒபிஸர்' என்று கூறும் போஸ்டல் பியூன் கணேச (ராஜரத்தினம்) வின் நகைச்சுவையையும், பட்டைபட்டையாகதிருநீற்றுப் பூச்சுடன் கணேசிற்கு அவரின் பார்வைக்கு அழகான "மனுஷி" படமெடுத்துச் சிறிவிழுவதையும் காசுகொடுத்துப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஏனென்றால் அவர்கள் சிரித்துக்கொண்டே கொடுத்த காசு வடக்கிலும், கிழக்கிலும் அழுதுகொண்டேயிருக்கும் திக்கற்ற குடும்பங்களின் ஒருதுளி கண்ணீரைத் துடைக்க உதவப் போகிறது, அதனால்தான். ஆம், இந்நாடகம் 'ஈழநாடு' புயல் நிவாரண நிதிக்காக நடத்தப்பட்டது. நாடகத்தில் வரும் மணியகாரனைப் பார்க்கும்போதெல்லாம் உண்மையில் யாழ்ப்பாணத்து மணியகாரனாகவிருந்த பழைய ஆள் ஒருவருடைய ஞாபகமே வந்தது. மணியகாரன் என்றால் அசல் மணியகாரன்தான். பேச்சு, சிரிப்பு, களைப்பு, படபடப்பு, பெருமை எல்லாம் ஒருங்கே அமைந்த 'மணியகாரன்'.

ஒதுக்கப்பட்ட சமூகக்குடும்பம் பொன்னர் தம்பதிகளைப் பற்றி ஒருவார்த்தை கூறவிட்டால் நிறைவிருக்காது. தத்ரூபமான ஜோடி. வெற்றிலைக் குதப்பலுடனும், வெடிவால் குடுமியுடனும் திரியும் பொன்னர் அலாதியாகப் பேசும் மனைவியோடுகடித்துபிரமாதப்படுத்திவிட்டார்.

மணியகாரனின் கட்டுப்பாட்டை வெட்டிக்கொண்டு சாதிப்போரில் தந்தையோடு மோதி இறுதியில் வெற்றி கண்ட மணியகாரன் மகன், தமது பாத்திரத்தை இடத்துக்குப் பொருத்தமான முறையில் மாற்றியமைத்து பாராட்டைப் பெற்றார். இப்படியே ராஜ் நகைச்சுவை மன்ற நடிகர்களின் ஒவ்வொரு பாத்திரங்களும் பாராட்டுக்குரியவரானார்கள்.

நடிகர்கள் விபரம்: பத்மநாதன் - கோவிந்தன், ராஜரத்தினம் - போஸ்டல் பியோன், பரமானந்தன் - மணியகாரன், பலேந்திரா - மணியகாரன் மகன், செல்வி விஜயா ரத்தினசாமி - மணியகாரன் மகள், செல்வி லீலா வெற்றிவேலு - பியோன் மனைவி, நாகேந்திரா - பொன்னர், யோகேஸ்வரி கனகசபை - பொன்னர் மனைவி, கோவில் மணியம் - திருநாவுக்கரசு, தங்கச்சி - திலோஷினி பத்மநாதன்.

ராஜ் நகைச்சுவை நாடக மன்ற காரியதரிசி திரு. பலேந்திரா பேசுகையில் இந்நாடகத்துக்கான அச்சுவேலைகளை இலவசமாகச் செய்து கொடுத்த அரசன் அச்சகத்தாருக்கும், ஒலி அமைப்புச் செய்த சிடில்ஸ் ஸ்தாபனத்தாருக்கும், மேடையமைப்புக்குப் பொறுப்பாக விருந்த கோக்தா, ஒப்பனைக்குதவிய திரு. கே. முருகானந்தம், ஒளியமைப்புச் செய்த திரு. கே. எஸ். ராஜா, கதிரைகளை இலவசமாகக்கொடுத்த எடின் சார்ள்ஸ் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

நாடகத்துக்கான இதர செலவுகள் எல்லாவற்றையும் ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரே ஏற்றுக்கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரபல வர்த்தகர் திரு. வி. சண்முகம் தலைமையில் இந்நாடகம் நடைபெற்றது.

— பாலா

---

அமெரிக்காவில் ஒஹியோ மாகாணத்திலும், யூட்டா மாகாணத்திலும் சிறுவர்களுக்கும் பதினெட்டாவது வயதுவரை பள்ளியில் படிக்கவேண்டிய கட்டாயமிருக்கிறது. இதை மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதைச் சாதாரணமாக எவரும் மீறுவதில்லை— கல்வியை அவர்களனைவரும் உளமார நேசிக்கிறபடியால்! எம் நாட்டில்.. !

* * *

சினிமாப் பைத்தியங்கள் நம்நாட்டில்தான் அதிகம் என்று எண்ணுகிறீர்களா?

இங்கிலாந்தைக் கவனிக்கும் போது நம்நாடு எம்மாத்திரம்! இங்கிலாந்திலுள்ள சராசரி ஆணும் பெண்ணும் டெலிவிஷன் இருந்தும் 10 நாட்களுக்கு ஒரு சினிமா வீதம் செல்கிறார்கள்.... ஆனால் சினிமாவையே பெரிய தொழிலாகக்கொண்டிருக்கும் அமெரிக்காவில் ஆணும் பெண்ணும் 22 நாட்களுக்கு ஒரு சினிமா வீதம்தான் செல்கிறார்களாம்.

---

## சேர் அருணாசலம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கதிர்காமத்தைப் பற்றிய ஒருசிறந்த சரித்திர ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி உள்ளார்.

அருணாசலம் அவர்கள் "இலங்கையில் உள்ள வெண்கலச் சிலைகள்" என்னும் நூலினை எழுதியுள்ளார். அதில் பொலனறுவையில் கண்டெடுக்கப பட்ட அற்புத நடராசச் சிலை, சுந்தரமூர்த்திசிலை, முதலியவற்றிற்கு விளக்கம் செய்துள்ளார்.

இவரை ஒரு ஞானி என்று எட்வேட் காப்பென்ரர் என்னும் ஆங்கில அறிஞர் கருதினார். சேர். பொன் அருணாசலம் அவர்கள் கீழ்நாட்டுக்கலைகளுக்கும் இந்துசமயத்திற்கும்செய்ய வேண்டும் என்றுகண்ட கனவுகளை இந்துத்தமிழ்ப் பெருமக்களாகிய நாம் நனவாக மாற்றுவதே அப் பெரியாருக்கு செய்யும் சிறந்த பணியாகும்.

— லை மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரா (7ம் பக்கத் தொடர்ச்சி)

நான் முழுவதும் சேகரித்த தேனை உட்கொண்ட வண்ணம் அர்ச்சுனன் கூறிய புகழ் வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்தேன். சென்ற பிறவியின் நினைவும், எனது அனுபவங்கள் நிறைந்த முன்னைய வரலாற்றையும் நான் மறந்தேன். ஒரு மலர், தான் வாட முன்னதாய் உள்ள சில மணி நேரங்களில் காட்டில் உள்ள குசுகுசுத்தல்களை எல்லாம் கேட்டுவிட்டு, ஒரு சப்தமும் இன்றி ஆகாயத்தில்வாடி மண் மீது வீழ்கின்றது. இவ்வாறு ஒரு இறந்த காலமும் எதிர் காலமும் இல்லாத ஒரு பூர்ணமான விநாடியின் சிறுகதை முடிவு பெறுகின்றது.

மத: மட்டற்ற கீர்த்தியுள்ள வாழ்நாள் அரும்பி, ஒரு காலையிலே முடிவு பெறலாம். குறுகிய அளவில் உள்ள பாட்டில் ஆழம் செறிந்த கருத்துக்கள் அடங்கியதைப் போல எனக்குத் தோன்றுகிறது.

சித்: தெற்கேயிருந்து வீசிய தென்றல், என்னை நித்திரையில் ஆழ்த்திவிட்டது. நான் எழுந்திருந்த பொழுது, துறவி எனக்கு முன் நின்றதைக் கண்டேன். இலைகள் ஊடாக நோக்கிய வண்ணம், சந்திரன் மேற்கே சென்றான். காற்றில் சுகந்தம் நிறைந்திருந்தது. சில் வண்டுகள் செய்த ரீங்காரத்தினால் இருளின் மௌனம் கலைந்தது. மரங்களின் நிழல்கள் ஏரியில் அசைவின்றித் தூங்கின. அவர் தனது தண்டுடன் உயரமாகவும் நேராகவும் அமைதியாகவும், வனத்து மரம்போல நின்றார். அவர் ஆருயிரே! எனது அருமருந்தன்ன ஆருயிரே" என்று அழைத்ததைக் கேட்டேன். நினைவில்லாத பழைய பிறவிகள் எல்லாம் ஒன்றாகி அதற்கு உத்தரவளித்தது. நான் "என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். முழுவதுமாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினேன். நான் என் இருகைகளையும் நீட்டினேன். சந்திரன் மரங்களின் பின் மறைந்தது. இருள் திரை ஒன்று, எங்கும் எல்லாவற்றிலும் பரந்தது. அதன்பின் சூரிய உதயத்தின் முதற் கதிருடனும் பட்சி சாலங்களின் இன்னிசையுடனும் நான் எழுந்தேன். மூன்றாம் பிறையினைப்போல ஒரு மெல்லினப் புன்னகையுடன் அவர் படுத்துச் சயனித்திருந்தார். நான் பெருமூச்செறிந்து எழுந்து நின்றேன். சூரியனுடைய ஒளி அவருடைய முகத்தைத் தாக்காமல் பூங்கொடிகளை இணைத்துப் பொருத்தி வைத்தேன். நான் சுற்றிலும் பார்க்கும் பொழுது பழைய பூமியையே கண்டேன். நான் எப்படி முன்னர் இருந்தேன், என்பதை நினைவில் வைத்து, ஒரு மான் தனது நிழலைப் பார்த்து ஓடுவதைப் போல நான் செண்பக மலர்கள் தூவியுள்ள வனப்பாதையூடாக நடந்தேன். அங்கு ஒரு தனிப்பட்ட சந்தில் கீழே இருந்து... என் இரு கைகளாலும் எனது முகத்தை மூடிக் கண்ணீர் சிந்தி ஓலமிட்டு அழ ஆரம்பித்தேன். ஆனால் எனது கண்களில் நின்று ஒரு கண்ணீரும் வரவில்லை!

மத: என்னை! பூலோக மகனே! நான் தேவலோகத்திலேயுள்ள அமிர்தத்தைக் களவாடி வந்து ஓர் இரவு அளவு, பாத்திரத்தின் விளிம்புவரையும் நிரப்பி, உனது கையில் அருந்தும்படி தந்தேன்- இன்னும் அந்த மனநோயின் ஓலத்தைக் கேட்கின்றேனே! ஐயோ! ஒரு தனி இரவு எவ்வளவு வீண் பெருமை கொள்ளச் செய்துவிட்டது. மகிழ்வாகிய படகு தென்பட்டது ஆயினும் அலைகள் அதனைக் கரைசேர்க்கவிடவில்லை.

சித்: சுவர்க்கம் எனக்கு மிக்க சமீபத்தில் வந்ததினால், எனக்கு அது கிட்டவில்லை என்பதை ஒரு விநாடி மறந்தேன். ஆனால் எனது கனவிலிருந்து காலை எழுந்தபொழுது, எனது உடலே எனது விரோதி என்பதைக் கண்டறிந்தேன். அதை ஒவ்வொரு நாளும் அலங்கரித்து, எனது காதலரிடம் சமர்ப்பித்து அவர் கொஞ்சிக் குலாவக் காணுவது எனது வெறுப்பான கடமையாக இருக்கிறது, தெய்வமே! உங்கள் வரத்தை மீட்டுக் கொள்ளுங்கள்.

மத: அதனை நான் உன்னிடம் இருந்து எடுத்தேன்... ஆகில் உனது காதலன் முன் எப்படி நிற்பாய்?

சித்: இதனைவிட அது சிறந்தது என்று கருதுகிறேன். நான் அவருக்கு என்னுடைய உண்மையான தோற்றத்தை அப்பொழுது வெளியிடுவேன், இந்த வேடத்திலும் அது மேலானது. அவர் என்னை வேண்டாம் என்றால், அவர் என்னை வெறுத்து இருதயத்தை முறித்தார் என்றால் அதையும் மௌனமாகப் பொறுத்துக் கொள்வேன்.

மத. நான் சொல்வதைக் கேள். இலையுதிர்காலம் வந்தவுடன் பூக்கள் பொலியும் காலம் முடியும்; அதன் பின் வெற்றியாகிய பழங்கள் கனியத் தொடங்கும், தானாகவே ஒரு காலம் வரும். வரும்போது உடலின் வெப்பம் மிகுந்த மலர்ச்சி சுருங்கி வாடிவிடும். (போய்க்கொண்டு) அதன்பின் அர்ச்சுனன் உன்னிடம் உள்ள உண்மையை ஏற்றுக்கொள்வான், குழந்தாய்! இன்றிரவே உனது கடைசி இரவு!... உனது உடலின் அழகு நாளை... முடிவுறாத இளவேனிற் காலத்தில் புகுந்துவிடும். உன் அதரங்கள் அர்ச்சுனன் இட்ட முத்தங்களின் ஞாபகத்தில் இருந்து விடுபட்டு... அசோக இலைகளைப்போல மீண்டும் அரும்பும். உனது மென்மையான மேனி... வாசம் மிக்க மலர்களின் பளபளப்பைப் பெறும்.

சித்ரா: தெய்வமே... இன்று இரவு... கடைசி நேரத்தில்... அதிபிரகாசமாக எரியும் சுடரைப்போல... எனது அழகும், பிரகாசமாக எரியும் சுடரைப் போல... பிரகாசிக்கக்கூடிய அளவு இருக்கச்செய்யுங்கள்!

மத: (போய்க்கொண்டு) சித்ரா... நீ உனது விருப்பத்தைப் பெறுவாய்.

—4—

கிராமவாசி: இப்பொழுது யார் எங்களைப் பாதுகாக்கப் போகிறார்கள்?


அர்ச்சு: ஏன்! இப்பொழுது என்ன ஆபத்து உங்களைச் சூழ்ந்திருக்கிறது.

கிரா: மலையிலுள்ள வெள்ளத்தைப் போல, வடபகுதியில் உள்ள மலைகளில் இருந்து கள்வர்கள் எங்கள் கிராமத்தைப் பாழாக்குவதற்கு வருகிறார்கள்.

அர்ச்சு: இந்தக் கிராமத்தைப் பாதுகாக்க பாதுகாவலன் ஒருவனும் இல்லையா?

கிரா: அரசிளங்குமாரி சித்ராவை அணுக துஷ்டர்கள் பெரிதும் அஞ்சினர்... அவர் இந்த மகிழ்வுள்ள நாட்டில் இருந்த பொழுது, இயற்கையாய் வரும் மரணங்களுக்காக மட்டுமே நாம் அஞ்சினோம்; வேறு ஒரு பயமும் இருக்கவில்லை. இப்பொழுது

(9ம் பக்கம் பார்க்க)


மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள். கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு. எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி, பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும். அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து. சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்றுதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் கிரீமை அடித்தளமாக பாவியுங்கள்.




சருமத்திற்கு புதியதோர்
மெருகூட்ட
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

566/65


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரா

## மூலம்: ரவீந்திரநாத் தாகூர்

## தமிழில் தருபவர்: வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ.

### — 1 —

சித்திரா: தாங்கள் தானா காதற் கடவுளாகிய மதனன்?

மதனன்: நான் தான் சிருஷ்டிக் கடவுள் இதயத்தில் உதித்த முத்தவன். நான் ஆடவர் மகளிர் இரு சார்பாரின் வாழ்க்கையை இன்பம் துன்பம் எனனும் கயிற்று இழைகளால் பிணைப்பவன்.

சித்: அந்த பந்தம் என்ன என்பதும் அந்த மனநோய் என்ன என்பதும் எனக்குத் தெரியும்-என் அண்ணலே நீங்கள் யார்?

மத: நான் பருவகாலங்களின் அரசனாகிய வசந்தன். நான் இல்லையேல் உலகத்தில் உள்ள மக்கள் மரணத்தாலும் மூப்பினால் வந்த மெலிவாலும் எலும்புபோல் வற்றிவிடுவர். நான் என்றென்றும் வாழும் யுவன்.

சித்: அண்ணலே வசந்தனுக்கு அடியாள் வணக்கம்.

மதன்: அழகு வாய்ந்த கன்னியரே! உங்கள் கன்னிக் காலத்தை தபசுகளாலும் உடல் தண்டனைகளாலும் ஏன் வாட்டுகிறீர்கள்? காதற் கடவுளை வழிபடுவதற்கு, இப்படியான பலியீடு உகந்ததல்ல. நீங்கள் யார்... உங்கள் கோரிக்கை என்ன?

சித்: நான் மணிப்பூர் அரச பரம்பரையில் உதித்த மங்கை. என் பெயர் சித்திரா. எனது பாட்டனுக்கு சிவபெருமான், ஆண் சந்ததியை ஈந்துள்ளார். ஆயினும் என் தாயாரின் கருவிலேயுள்ள சிவப் பொறியினை மாற்ற முடியவில்லை. நான் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தாலும் பிடிவாதகுணம் உடையவள்.

மத: எனக்குத் தெரியும். ஆகவேதான் உங்கள் தந்தையார் தனது ஆண் மகனைப் போல உன்னை வளர்த்துவருகிறார். வில்வித்தையையும் அரசனுக்குரிய கடமைகளையும் உனக்குக் கற்பித்துள்ளார்.

சித்: ஆம், அதனால் தான், நான் ஆண் உடைகளைத் தரித்து வருகிறேன். இருதயங்களைக் கொள்ளை கொள்ளுவதற்காக வேண்டிய மெல்லியலாரின் சாகசங்கள் எனக்கொன்றுமே தெரியாது.

மத: அதற்கு ஒருபோதனை தேவையில்லை கட்டழகியே! கண்ணானது ஒரு போதனையுமின்றி தனது தொழிலைச் செய்கிறது, அதற்கு யாருடைய இருதயம் பிளக்கப்படுகிறது என்பது நன்கு தெரியும்.

சித்: பூர்ண ஆற்றின் கரையிலுள்ள காட்டில் வேட்டையாடும் பொருட்டு அலைந்து திரிந்தேன். அங்கு ஒரு மரத்தின் அடி மரத்தில் என்னுடைய குதிரையைக்கட்டிவிட்டு, ஒரு மானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்லும்பொழுது, ஓர் அடர்ந்த காட்டை அடைந்தேன், அங்கு சில் வண்டுகள் நிறைந்த இலைகள் மலிந்த கொம்பர்களின் நிழலின் கீழ் நான் நடந்த பொழுது, எனது பாதையின் குறுக்கே, ஓர் ஆடவன் உலர்ந்த இலைகளின் மேல் படுத்திருந்ததைக் கண்டேன். நான் அவனை விலகி வழிவிடும்படி கேட்டேன், ஆனால் அவன் அசையவில்லை. பின்பு எனது வில்லின் கூரிய முனையால் அவனைக் குத்தினேன்.

மத: நல்ல சுப வேளையில் தான், ஆடவன் அணங்கு இருவருக்கும் அவர் அவர்களை விளக்குவதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் உன்னத பாடத்தை கற்பிக்கின்றேன்... அதன் பின்னர் என்ன நடந்தது சித்ரா?

சித்: அச்சத்துடனும் ஆச்சரியத்துடனும் நான் அவரை "நீ யார்" என்று கேட்டேன். அவர்... "நான் தான் குருகுலத்தைச் சேர்ந்த அர்ச்சுனன்" என்றார், நான் சிலையானேன். அவருக்கு மரியாதை செய்ய மறந்தேன். எனது கனவுகளின் தெய்வம் இவர் தானா? ஆம்! அவர்பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மச்சாரிய விரதம் பூண்டதாக நீண்ட காலத்துக்கு முன் கேள்வியுற்றேன். பல நாட்கள் அவருடன் மாறு வேடம் பூண்டு அவருடன் அறை கூவி, தனி யுத்தத்தில் வாட்போர் செய்து அவரை வெற்றி கொள்ள விரும்பினேன். அப்பொழுது அவர் மரங்களுக்கு ஊடாக மறைந்தார். நான் அவரை வரவேற்கவும் இல்லை, அவரிடம் மன்னிப்புக் கோரவுமில்லை. அடுத்தநாள் காலைநான் எனது ஆடவனின் ஆடைகளைக் களைந்தேன். வளையல்களும், சிலம்புகளும் மணிமேகலையும் தரித்து ஊதாச் சிவப்புப்பட்டு ஆடை அணிந்தேன். அந்தப் பழக்கமில்லாத ஆடை எனக்குக் கூச்சம் அளித்தது, ஆயினும் நான் என் மன நாட்டத்தின் பிரகாரம் சென்று வனத்தில் உள்ள சிவன் கோவிலில் அர்ச்சுனனைக் கண்டேன்.

மத: எனக்கு அந்தக் கதையை முடியும் வரை கூறுங்கள். இருதயத்தின் கடவுள் நான். அதனால் இந்த மனோவேகங்களின் இரகசியங்களை எல்லாம் நன்கு அறிவேன்.

சித்: மிகத் தெளிவில்லாமலே நான் என்ன சொன்னேன் என்பதும், அதற்கு என்ன விடை கிடைத்தது என்பதும் நினைவாக இருக்கிறது. எல்லாவற்றையும் உங்களிடம் கூறும்படி கேட்க வேண்டாம். ஆனால்... "நான் பிரமச்சரிய விரதம் பூண்டுள்ளேன், நான் உனக்கு நாயகனாகை இருப்பதற்கு தகுதியுடையவன் அல்ல" என்று அவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் எனது காதுகளுக்கு நாராசமாயின. என்னே! ஓர் ஆடவனின் சபதம்! காதல் கடவுளே! கணக்கற்ற ஞானிகளும் தபசிகளும் ஒரு மெல்லியலாரின் பாதத்தில், தங்கள் தவத்தின் பலனை அர்ப்பணம் செய்துள்ளார்கள். நான் எனது வில்லை இரண்டாக முறித்து அம்புகள் யாவற்றையும் நெருப்புக்கு இரையாக்கினேன். வில்நாணை பிடித்து உரம் ஏறிப்போன எனது பலம் வாய்ந்த கைகளை வெறுத்தேன். தெய்வமே! ஆடவனைப் போல நான் பயின்ற பயிற்சி முழுவதும், உனது பாதத்தின் அடியில் கிடக்கின்றன. உனது பாடங்களை எனக்கு கற்பிப்பாய், ஆயுதமில்லாத கைகளையும் சக்தியற்றோரின் நிலையையும்எனக்கு அளிப்பாய்!

மத: நான் உனக்கு உதவி செய்வேன் சித்திரா... உலகத்தையே வெற்றி கொள்ளும் அர்ச்சுனனை உனது அடிமையாக்கி, அவன் உனக்குக் கீழ்ப்படியாததற்கு உன்னிடம் இருந்து தண்டனையும் பெறச் செய்வேன்.

சித்: எனக்கு சந்தர்ப்பம் கிட்டுமாயின், தேவர்களிடம் ஓர் உதவியும் பெறத் தேவையில்லை, அவருடைய இருதயத்தை, மெல்ல மெல்லக் கொள்ளை கொள்ளலாம் என நம்புகிறேன். நான் அவருடைய நண்பராக தோளோடு தோள் நின்று, அவருக்குத் தேர்ச்சாரதியாகவும், வேட்டையாடும் பொழுது துணைவராகவும், இரவில் கூடாரத்தில் உறங்கும் பொழுது காவல்காரராகவும் பணி புரிவேன். எளியோரை மீட்டல், நீதியைச் செலுத்தல் முதலிய சத்திரியரின் உயர்ந்த கடமைகள் யாவற்றிலும் அவருக்கு உதவிபுரிவேன். வசந்த தேவா... பருவ காலங்களுக்கு தெய்வமாகிய பிரபுவே! உம்மைச் சரண் அடைந்தேன்! என்னிடம் இயற்கையாக அமைந்துள்ள அலங்காரமற்ற உடலின் தன்மையை நீக்கி விடவும். ஒரு நாளைக்காவது என் இருதயத்தில் இந்த காதல் உணர்ச்சி எப்படி உதித்ததோ அதே போல, எனக்கு ஒரு நாளைக்காவது உன்னதமான மென்மைஅழகைஅளித்து விடவும். ஒரு நாளைக்கு நான் சம்பூர்ணமான அழகுடன் திகழும்படி அருள்வீர்!

மத: (போய்க்கொண்டு) ஒரு நாளைக்கு அல்ல; ஒரு முழு ஆண்டுக்கு உனது உடலின் அங்கங்களில் இளந்தென்றலின் மனோகரம்நிலைத்து நிற்க அருளுகிறேன். சித்ரா... நீ போய் வரலாம்...

### —2—

அர்ச்: ஏரிக்கு அருகே நான் கண்டது உண்மைதானா? பச்சைப் பசேல் எனக் காணப்படும் புற்றரையில், சாயுங்காலம் முதலாக பழைய காலத்தைப்பற்றிய நினைவுகள் எழுந்தன. அப்பொழுது இலைகளின் மத்தியில், ஒரு பெண்ணின் உருவத்தை, தண்ணீர் விளிம்பில் கண்டேன், அவளின் சுத்த வெள்ளைப் பாதங்களின் கீழ் பூமாதேவின் இருதயமே மகிழ்ச்சியில் பொங்கும். கிழக்கு மலையின் பனி தோய்ந்த உச்சி, சூரியோதயத்தைக் கண்டவுடன் எப்படி மறைகிறதோ, அவளுடைய உடலைச் சுற்றியுள்ள மெல்லிய ஆடைகள் ஆனந்தக் களிப்பில் அவ்வாறு காற்றில் மறையும் எனச்சிந்தித்தேன். ஏரியில் உள்ள தண்ணீர்ப் பளிங்கில் அவள், தனது முகத்தின் பிரதிவிம்பத்தைக் கண்டாள், அப்பொழுது அச்சமுற்று, அசைவற்று நின்றனள். பின் புன்னகை புரிந்து ஆயாசமின்றி அவளுடைய இடது கையினால் தனது தலை முடிகளை அவிழ்த்து. அவள் கேசம் பூமியைத்தொடும்படி குலைந்துவிட்டாள். கொஞ்சம் தன்மை படைத்துள்ள தனது கைமலர்களைப் பார்த்தாள். தனது தலையைக் குனிந்து, அவள் தனது யௌவனத்தின் மலர்ச்சியையும் தனது மேனியின் மினுக்கையும் தழுக்கையும் [illegible] புன்னகை புரிந்தாள். வெள்ளை [illegible] மலருபொழுது, தனனுடைய மூக்கைப் பார்த்து அதன் நிழலைக்கண்டால் நான் முழுவதும் ஆச்சரியமடையுமாம்! ஒரு நிமிடத்தில் அப் புன்னகை மாறி அவள் கண்களில் ஏக்கம் வந்தடைந்தது. அவள் தனது கேசத்தை முடிந்து, அவளுடைய கைகளின்மேல்முகத்திரையிட்டு, பெருமூச்செறிந்துகொண்டு, அழகான சாயுங்காலம் இரவினில் மறைவது போல, மெல்ல மெல்ல நடந்து சென்றனள்.எனக்கோ, என் ஆசையின் முக்கிய நிறைவு ஒரு நொடியினில் காட்டப்பட்டு, உடனே மறந்ததைப் போல இருந்தது...

யார் கதவைத்திறப்பது? ஆம்! அவள் தான்! என் நெஞ்சமே அமைதியாக இரு. அணங்கே, அச்சம் வேண்டாம். நான் ஒரு சத்திரியன்!

சித்: பெரியோய்! தாங்கள் எனது அதிதி. நான் இந்தக் கோவிலில் வசிப்பவள். உங்களுக்கு எவ்வாறு என் உபசாரங்களைச் செய்வது என்பது தெரியவில்லையே!

அர்ச்: அழகிய அணங்கே! நீங்கள் பிழையாக விளங்கிக் கொள்ளாதிருப்பின் நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

சித்: கேளுங்கள்....

அர்ச்: இந்த ஏகாந்தமான கோவிலில் மக்கள் உங்கள் அழகான தோற்றத்தைப்பார்க்காதவண்ணம் சிறையிருப்பது என்ன கடின சங்கற்பத்தினாலோ?

சித்: என் மனதில்ஒருகோரிக்கையுண்டு. அதனை அடைவதற்காக நான்சிவபிரானுக்குஇங்கு தினசரி பிரார்த்தனைகள் செய்துவருகிறேன்.

அர்ச்: ஐயகோ உலகம் முழுவதும் விரும்பக் கூடிய அதிரூபவதியான நீ, என்ன ஆசையைக் கோரமுடியும்? நானோ சூரியன் உதிக்கும்நாடு தொடக்கம், அது மறையும் நாடுவரையும் பிரயாணம் செய்துள்ளேன். உலகில் எது பெருமை வாய்ந்ததோ, எது அழகு வாய்ந்ததோ, எது அருமை வாய்ந்ததோ, அத்தனையும், நான் கண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்ததை, நான் சொல்லித்தருகிறேன், நீ யாரைத் தேடுகிறாய்...... எந்தப் பொருளை நாடுகிறாய்?

சித்: நான் நாடும் அவர் யாவர்க்கும் அறிந்தவர்!

அர்ச்: உண்மையாகவா? உனது இதயத்தைக் கவர்ந்த தெய்வங்களின் ஆசியைப் பெற்ற அப் புண்ணிய சீலர் யாவரோ?

சித்: அவர் எல்லா அரச வழியினருக்கும் மேலான குரு வம்சத்தைச் சேர்ந்தவர். எல்லாக் காவ்ய நாயகரிலும் சிறந்தவர்.

அர்ச்: அணங்கே! பொய்யான கீர்த்தியின் பீடத்தில் உன் அழகின் செல்வத்தைப் பலியிடாதே. சூரியன் எழுமுன் வரும் மூடு பனியைப் போல, பொய்யான புகழ் ஒரு நாக்கில் இருந்து மற்றைய நாவுக்குப்பரவும்.

சித்: துறவி! மற்றைய மக்களின் புகழைக்கேட்டு பொருமை கொள்ளுகின்றீர். உலகிலுள்ள அரச பரம்பரைகளுள் குரு வம்சத்தினர் சிறந்தவர் என்பது தெரியாதா?

அர்ச்: குருவம்சவழியினரா?

சித்: அந்தவம்சத்துதித்தவர்களுள் தலை சிறந்தவரின் பெயரை நீவிர் கேள்விப்படவில்லையா?

அர்ச்: உனதுவாயால்கூறுக, நீ அப்பெயரைச் சொல்ல அதை நான் கேட்கவேண்டும்.

சித்: பல மக்களின் கையில் இருந்து உலகத்தை வென்ற அர்ச்சுனனுடைய பெயரைக் கேள்வியுமறு. அந்த......என்றும் அழியாப் பெயரை மங்கையான் உள்ளத்தில் வைத்துள்ளேன் துறவியே! ஏன் பரபரப்புடன் பார்க்கிறீர்கள் அப்பெயர் போலிப பளபளப்புடையதா? அப்படிச்சொல்லுவீராகில்நான் என் இருதயப்பெட்டியில் காப்பிட்டு வைத்திருக்கும் போலி இரத்தினத்தை மண்ணுள் வீச...பின்னிற்க மாட்டேன்.

அர்ச்: அவர்பெயரும் புகழும் வீரமும் தீரமும் உண்மையாயினும்சரி, பொய்யாயினும் சரி, உன் இதயத்தினின்று அவரை நீக்கிவிடாதே, இரக்கம் காட்டு சித்திரா. ஏனெனில், அவர் இப்பொழுது உன் பாதங்களில் முழந்தாள் இடுகிறார்.

சித்: நீங்களா! நீங்களா அர்ச்சுனன்!

அர்ச்: ஆம் நான் தான் அந்த அர்ச்சுனன்!

சித்: அப்போது, அர்ச்சுனன் பன்னிரண்டு ஆண்டுகள்பிரமச்சரிய விரதம் பூண்டுள்ளனர் என்பது உண்மையன்று அல்லவா?

அர்ச்: இருளை எப்படி இலை கலைக்கின்றதோ, அதேபோல என் விரத வைராக்கியத்தை, நீ போக்கடித்துவிட்டாய்!

சித்: உமக்கு வெட்கம் இல்லையா? உமது நிலைக்கு பொய்யாக நடப்பதற்கு என்னிடம் என்னத்தைக்கண்டு விட்டீர்கள்? இந்தக் கருவிழிகளிலும் பால் வெள்ளைக் கைகளிலும் உமது உண்மைக்கூறு கொடுக்கச் சித்தமாகும்படி யாரைத் தேடுகிறீர்கள்? என்னுடைய உண்மையான ஆன்மா வையல்ல. எனக்குத் தெரியும். உண்மையில் இது காதல் ஆகுமா? இது பெண்மைக்கு அளிக்கத் தகுந்த உன்னதவழிபாடு ஆகுமா? ஐயோ! இந்த நிசமற்ற உடலின் லாவண்யம், இறவாத ஆத்மாவைப்பற்றி அறியவிடாமல் குருடாக்கி விட்டதே. ஆம் அர்ச்சுனா! உங்கள் கீர்த்திப் பிரதாபமும் வீரமும் தெரிந்து விட்டது.

அர்ச்: ஆம் பராக்கிரமத்தின் பெருமை வாய்ந்த புகழ் வீண் என்பதை நான் உணர்கிறேன். எல்லாம் ஒரு கனவைப்போல இருக்கிறது. நீமட்டுமே என் பூர்ணி, நீயே இப்புவியின் செல்வம், மிடிமைபோக்கும் பொருள், எல்லா முயற்சிகளினதும் இலட்சியம், ஒரே ஒரு பெண்! மற்றவர்கள் இருக்கிறார்கள் அவர்களை மெதுவாகவே அறியலாம் ஆனால் உன்னைப்பார்ப்பது ஒரு கணத்துக்காயினும், பூர்ணத்துவத்தை சதாகாலமும் பார்த்ததைப்போல இருக்கிறது.

சித்:ஐயோ! அதுநான் அல்ல, அர்ச்சுனா! அது ஒரு தெய்வம் செய்த மாயை! போங்கள். மாயைக்கும்(போய்க்கொண்டு) பொய்த் தோற்றத்துக்கும் உங்கள் இதயத்தைப் பலி கொடுக்காதீர்கள், போங்கள்!

### — 3 —

சித்: இல்லை அது முடியாது! என்னுள்ளே பசியாயுள்ள ஆத்மனின் கைகளைப் பிடிப்பதைப்போல் அல்லவா அவருடைய ஆவல் உள்ள பார்வையைக் காண்கிறேன். அவருடைய உடல் முழுவதிலும் இருந்து கட்டுகளை அவிழ்த்தெறியப் பாடுபடும் அவர் இதயத்தை நான் அறியக் கூடியதாக இருக்கிறது. அதனால் அவரைப் பிச்சைக்காரனாகப் பாவிப்பதா? இல்லை அது முடியாது! ஆ! காதல் தெய்வமே; என்னைச் சூழ்ந்து என்னை வாட்டும் உடல் எத்துணை பயங்கரமானது! நான் நெருப்பினில் வேகிறேன். தொடுவது எதுவென்றாலும் நான் வேகிறேன்!

மத: சென்ற இரவு என்ன நடந்தது என்பதை அறிய நான் விரும்புகிறேன்,சித்திரா,

சித்: சாயுங்காலம் நான் இளந்தென்றல் மலர்கள் தூவப்பெற்ற பசும் புற்றரையில் படுத்துக்கொண்டு நீண்ட

(6ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரி சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Woolen)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு கதை மலர்

# கடைசி யாத்திரை

## (1)

தாயாரும் சுற்றமும்
பெண்டிரும் கைவிட்டுத்
தாழ்ந்திடுநான்
நீயாரு நானுரு எனப்
பகர்வர் அந்த நேரத்திலே
நோயாரும் வந்து
குடிகொள்வரே, கொண்ட
நோயும் ஒரு
பாயாரும் நீயும் அல்லால்
பின்னேயே நட்பாமுடலே.

மனித உணர்வு என்ற சங்கிலியை அறுத்து எறிந்து விட்ட கோவணாண்டியின் பாடலிது. ஓதுவார் இப்பாடலை மேல் ஸ்தாயியிலே பாடுகிறார். பாடலின் கருத்தாழம் என் நெஞ்சை உலுக்குகிறது.

நேரத்தில் சிதறிப்போவது போல் எங்கும் சிதறிப்பரந்து பாய்கின்றன......

உலகத்து உண்மைகளைப் புரியமுடியாத பருவம். பத்து வயதிருக்கும். இரண்டாவது வகுப்பில் மூன்றாவது ஆண்டாகப் படித்துக்கொண்டிருந்தேன். 'குடும்பி' வாத்தியார் மொக்கன் என என்னை அடிக்காத நாட்களே இல்லை. தொக்கை டீச்சர் வகுப்புக்கு வந்துவிட்டால் அதன் அறிகுறி நான் முழந்தாளில் நிற்பதே. வலைஞ்ச வாத்தியாருக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. புளிமூட்டை மாஸ்டர் இருக்கிறாரே, அவருக்கு ஏன்தான் இவ்வளவு கோபம்? ஐயாவும்

தாயாரும் சுற்றமும்...

'அம்மா...நீ உறங்குகிறாய்... நன்றாக உறங்கு. உன் துயில் மீளாத்துயில்... உன் உறக்கத் துக்கு முடிவே இல்லை... எவருமே அதைக் கலைக்க முடியாது! அம்மா நீ தூங்கு! நிம்மதியாகத் தூங்கு...

'ஆனால் நீ பெற்ற என்னால் அப்படி உறங்க முடியுமா? என் உறக்கத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு தானா நீயும் உறங்குகிறாய்...?

'அம்மா—'

என்கடைக்கண்ணில் தோன்றிய நீர் முத்துக்களை விரல்களால் சுண்டி எறிகிறேன். கால்கள் உன் இறுதியாத்திரையின் முன்னே நடந்து கொண்டிருக்கின்றன. தோளிலே கொள்ளிகுடம்...! மார்பிலே பூநூல்...

அவரும் நல்ல சிநேகிதமாம். சிநேகிதனின் மகன் எனச்சிறிதளவாவது இரக்கம் வேண்டாமா? உஹும்!

கல்லூரி வாழ்க்கையிலே நான் கண்டது ஒன்றே ஒன்று தான். அடி! அடி!...அடி! வேறு ஒன்றுமேயல்ல.

வாழைப்பழத்தை அன்று 'வாலைப்பலம்' என எழுதி விட்டேன். தருணம் பார்த்துக் கொண்டிருந்த வலைஞ்ச வாத்தியார் தன் ஆத்திரம் தீரும் வரை என்முதுகைப் பதம் பார்த்து விட்டார். அப்போது தானா அந்த புளிமூட்டை வாத்தியாரின் மகன் என்னைக் கேலி பண்ணிபிருக்க வேண்டும்? இரண்டு முறை என்னைக் 'கோழிமுட்டை' எனக்கூறிவிட்டான. வழக்கமாகக் கணக்குப்பாடத்தில் எப்படிக் கூட்

— கு. ராதா ரமணன் —

## (2)

முடிசார்ந்த மன்னரும் மற்று
முள்ளாரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து
மண்ணாவதும் கண்டும்
பின்னும் இந்த
படி சார்ந்த வாழ்வை
நினைப்பதல்லால் பொன்
னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய
வேண்டுமென்றே அறிவா
ரில்லையே.

முடிசார்ந்த மன்னரும்...

முடிவில் மன்னரும் பிடிசாம்பராகி...

முற்றிலும் அப்பழுக்கற்ற வாழ்வின் உண்மையிது. பட்டினத்தாரினது இப்பாடலின் உண்மைமட்டும் நிதர்சனமாகக் கொண்டுவிட்டால் உலகில் சந்ததிப்பேறேது? உலகம் எப்போதோ வரம்பு கட்டிக் கொண்டிருக்குமே.

முடிவற்ற இலட்சியப்பாதை போல் நீண்டு கிடக்கும் பிரதான வீதியில் ஊர்வலம் நத்தையாக நகர்கிறது. உச்சியில் நின்ற சூரியனின் வெந்தழற் கிரணம் சுள்ளெனச்சுடும் மதியம்.

'அம்மா நீ இந்த வெய்யிலிலே...உன்வயிற்றில் உதித்த நானே உன்னைத்தீயிடமுன்னே நடந்து கொண்டிருக்கிறேன்-' என் நினைவலைகள்' தோளிலே உள்ள கொள்ளிகுடம் சிறிது

டிப்பார்த்தாலும் எனது புள்ளிகள் 'சைவரை'த் தாண்டி விடாது. இதனால் கணக்கு வாத்தியார் என்னைப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. 'கோழிமுட்டை' என்று தான் கூப்பிடுவார். கணக்கு வாத்தியார் மற்றும் வலைஞ்ச வாத்தியார் எல்லாரதுகோபமும் பாஸ்கரனின் மீது திரும்புகிறது. எப்பொழுது மூன்றாவது முறை அப்படி அழைப்பான் என எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

"டே! கோழிமுட்டை".

பாஸ்கரனின் வாயில் இருந்து வார்த்தைகள் வெளிவந்து தான் தெரியும். பின்னர் என்ன நடந்ததோ? ஆத்திரம் என் கண்களை மறைக்கிறது. பாஸ்கரனுடைய சிலேற்று அவனது தலையில் மோதி சுக்கல் சுக்கலாக நொருங்கியபோது தான் உணர்ந்தேன்...... அவன் தலையில் வெடிப்பு. இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. இதைக்கேள்விப்பட்டதும் பதற்றத்துடனே ஓடிவந்தார் புளிமூட்டை வாத்தியார். 'என்ன இருந்தாலும் பெற்ற புள்ளையல்லவா? ஆத்திரம் வருவது இயற்கைதான். அதுவும் எல்லையை மீறுவதில் வியப்பில்லை... அதற்காக அவர் அடித்திருக்கலாம். ஆனால் அவர் கூறியவார்த்தைகளோ...

"ஒழுங்கான தாய் தகப்பனுக்குப் பிறந்ததுகள் அல்லோ ஒழுங்கா நடக்குங்கள்!"

இவை, வார்த்தைகளா? அக்கினிப் பொறிகள்! நன்றாகச் சுட்டுவிட்டன. உலைக்களம் போல் என் உள்ளம் கொதிக்கிறது. அம்மா! வழக்கமாகக் 'கொல்' எனச் சிரிக்கும் மாணவர்கள் அன்று மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்களே!' ஏன்? என ஆத்திரத்துக்குப் பயந்தா இவர்கள் மௌனம் சாதித்தார்கள்? இல்லை. அவர்களது பார்வையிலே ஆயிரம் ஈட்டிகள் என் உள்ளத்தைக் குத்திக் குதறுகின்றனவே! பணிகம் பாலும் குடிக்காமலே அன்று ஓடிவருகிறேன். உன்னை அணைத்துக் கொண்டே என் நெஞ்சச்சுமை எல்லாம் தீரும்வரை அழவேண்டும் போலிருக்கிறது. அவசர அவசரமாக புத்தகப்பையை வீசி எறிந்துவிட்டு உன்படுக்கையறையை நோக்கி என் கால்கள் ஓடிவருகின்றன.

கதவு தாழிடப்பட்டிருக்கிறது.

கந்தையா மாமாவின் செருப்புகள் கதவருகே காட்சியளிக்கின்றன. ஊரிலே எல்லோரும் கதைக்கும் ஏதோ ஒன்றுதான், பாதி மூடிய யன்னல் வழியாக எட்டிப் பார்த்த என் விழிகளுக்கும் தெரிந்தவை......

"ஒழுங்கான தாய் தகப்பனுக்குப் பிறந்ததுகள் அல்லோ ஒழுங்கா நடக்குங்கள்"

வாத்தியாரின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என் செவிகளில் ஒலிக்கின்றன. அவ்வொலி அதிகரித்து அதிகரித்து என் காதையே அடைத்து விடுவது போன்றமயக்கம்.........

## (3)

இருப்பது பொய், போவது
மெய் என்றெண்ணி
நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கதனை
உன்னாதே! - பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்
நரிகள்,பேய் கழுகு
தம்மதென்று தாமிருக்கும்
காண்

பாடையைச் சுமந்து செல்வோர் சுமைதாங்காது தோள்களைமாற்றிக் கொள்கின்றனர். அம்மா... நீஎதற்காக ஐயாவை வெறுக்கிறாய்? அவருக்குஎன்ன குறை? என்றாவது உனக்குக் கை நீட்டியது உண்டா?

## தைத் தும்பை

ஆரம்பத்தில் கந்தையா மாமா அறிமுகமாகிய போது நீ சரியாக முகம் கொடுத்துக்கதைத்கவில்லை. அதற்காக ஐயா உன்னைக் கோபித்துக் கொண்டார். அன்று அப்படி நடந்த நீயா இன்று இப்படி... ஒரு...சீ!...அம்மா...அம்மா...

## (4)

மாலைப் பொழுதில் நறுமஞ்சள்
அரைத்தே குளித்து
வேலை மினுக்கிட்டு விழித்
திருந்து-ஞாலிப்
பெற்றான் வளர்த்தான் பெய
ரிட்டான் பெற்றபின்னை
பித்தானால் என் செய்வான்
பின்?

இடையே குறுக்கிடும் சந்தியால் ஊர்வலம் திரும்புகிறது. யாரோ மயிர் களைந்த நாத்தா என் தோள் சுமையை பகுறைத்துக்கொள்ள கொள்ளிக்குடத்தைக் கையிலே வாங்கிக் கொள்ளுகிறார். தோளின் சுமை நீங்கிவிட்டது. ஆனால் நெஞ்சத்தின் சுமையை குறைக்க வல்லார் யார்? அது அழுத்தும் அழுத்தம் குறைந்து விடுமா?

மாலைப் பொழுது. ஐயா கொழும்புக்குச் செல்லப் போவதாக உன்னிடம் கூறுகிறார். நீ திடீரென என்னைக் கூட்டி அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறாய்.

"அவன் வந்தால் உமக்குத் துணை இல்லையே!"

"துணைக்குத்தானே ஆயா இருக்கிறாள். முன் அறையில் மனேஜா இருக்கிறார். இவையளைத் தவிர வேறதுணை எனக்கேன்?"

மனேஜர் என்ற சொல்லைக் கேட்டதும் ஐயாவின் முகத்திலே ஏற்பட்ட மாற்றம்...? அவர் உன்னைப் பார்த்த பார்வை ...? அர்த்தங்களை அறிந்துகொள்ள நான் என்ன அறிஞனா?

ஆயிரக்கணக்கான மணற்பரப்பை ஊடறுத்துச்செல்லும் அருவிநீரை அதைச் சுரக்கும் கற்பாறைதான் அறியும்.

அத்தனை விடயங்களையும் தன்னுள் ஜீரணிக்கும் மௌனம் அவரது முகத்திலே நிலவுகிறது. அவர் கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டார். அவரது

நேராகப் படுக்கை அறையை நோக்கிவருகிறார். கதவுதட்டப்படும் முன்னரே திறந்து கொள்கிறது. மனேஜர் புலியைக் கண்ட பூனைபோல் திடீரென வெளியே பாய்கிறார். உன் முகத்தில் எவ்வித சலனமுமில்லை. ஐயா அளவுக்கு மீறிய நிதானத்துடன் பேசுகிறார்.

"எத்தினை நாளாக இது நடக்குது?"

"......"

"கந்தையாவை நான் வேலையிலே இருந்து தள்ளிவிடப் போகிறேன்."

"... ..."

"அவன் இங்கே இருக்கக் கூடாது. இருந்தா இந்த குடும்பத்தைத் தெருவிலை விட்டிடுவான்"

"... ..."

"மரகதம் ஏன் பேசாமல் நிக்கிறாய்?"

"இதிலை நான் பேச ஒண்டுமில்லை!"

அம்மா நீ வாய் திறந்து பேசுகிறாய். அந்த வார்த்தைகளிலாவது கணவன் என்றபணிவு வேண்டாமா? ஒருவேளை ஐயாவை உன் நெஞ்சம் ஏற்கவில்லையா?

ஆமாம்! உலகில் குற்றம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் தன் குற்றத்திற்குப் பரிகாரமாய் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டிக்கொண்டுதானிருக்கிறான். அவன் உலகை ஏமாற்றலாம். சட்டத்தை ஏய்க்கலாம். நீதியை ஏமாற்றலாம். ஆனால் தன்னையே தன்னால் ஏமாற்றிக் கொள்ளமுடியுமா?

அப்பா மீண்டும் பேசுகிறார்.

"இப்பவே நான் கணக்கை முடிச்சு கந்தையாவை வெளியே அனுப்பப் போறன்"

"... ..."

"உனக்குச் சம்மதம்தானே?"

"இல்லை!"

ஐயோ அம்மா! ஒரு கணவனுக்கு மனைவி சொல்லும் வார்த்தைகளா இவை? ஆண்டிலும் அறிவிலும் குறைந்த என்னால் கூட தாங்கமுடியவில்லையே...!

"மரகதம்....மரகதம்"

என் வீட்டில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் உன்னிடம் தான் உயிரையே வைத்திருக்கிறார். ஐயாவின் நிலபுலன்களைப் பார்த்துப் பொறுக்கமுடியாமல் அல்லவா முன் வீட்டு வாத்தியார் சூனியம், பில்லி என ஏதேதோ எல்லாம் செய்ததாகக் கூறினர்கள்! அந்தக்காலத்தில் ஐயாதானும் பீ. ஏ. பட்டம் வாங்கியபெரும் புள்ளி, என்னைப் பார்ப்பவர்களோ தகப்பனைப்போல் மூக்கும் முழியுமாக அழகாக இருக்கிறான் என்றல்லவா கூறுகிறார்கள். உன் கணவனிடம் ஆணவம் இருந்திருந்தால் சர்வகலாசாலைபபடிமிதித்தபின்னரும் வேட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு கல்லாப்பெட்டியின் முன்னால் குந்தியிருப்பாரா? அப்படிப்பட்டவரை எதற்காக வெறுக்கவேண்டும்?

பிரிவிலே உன் முகத்தில் இன்பஅலைகள் குமிழியிடுவது ஏனோ?

படுக்கை அறைக் கதவுகள் தாழிடப்படுகின்றன. மனேஜரின் செருப்புகள் வெளியே காட்சியளிக்கின்றன, மேசையில் இருந்த புத்தகத்தின் பக்கங்கள் புரளுகின்றன. விரல்களால் தலையைத்தாங்கிக் கொள்கிறேன். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விக்கித்தவிக்கும் துன்பநிலையில்! சே! இது என்ன சீவியம்? என் வாழ்வை எண்ணி அழுவதா அன்றிச் சிரிப்பதா எனப் புரியவில்லை. அப்பொழுது கேட்ட சப்தம்...

ஐயாவின் காரைப் போலல்லவா கேட்கிறது யன்னலூடே எட்டிப பார்க்கிறேன். ஐயா கொழும்புக்குப் போகவில்லையா?

காரணம்?

அம்மா ... இந்த மனம் ஒரு குரங்கு. கட்டுத்தடுமாறி ஓடும் வரை எனக்கேது நிம்மதி, உறக்கம்...?

நீ உறங்குகிறாய் ...

ஆனந்த உறக்கம் ...

ஆனால் உன் செயல் என் உறக்கத்தில் அல்லவா தீயிட்டு விட்டது!

"மரகதம், நீ யோசிச்சுத்தானா பேசுகிறாய்?"—ஐயாகுரல் அடைக்கக் கேட்கிறார்.

"எத்தினையோ நாள் யோசிச்சப்போ [illegible] தான் [illegible] பேசுறேன்!

இதைக்கேட்டதும் ஐயாவின் முகத்திலே கொலைவெறி பளிச்சிடுகிற [illegible] கணப்பொழுதில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பாய்கிறார். என்ன செய்வதென்றே எனக்குப்புரியவில்லை. இன்னும் ஒரு சில

(9ம் பக்கம் பார்க்க)

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரா (6ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அரசகுமாரி தீர்த்த யாத்திரை சென்றுவிட்டாள்; ஒருவருக்கும் அவருடைய இருப்பிடம் தெரியாது.

அர்ச்: இந்தத் தேசத்தின் பாதுகாவலர் ஒரு பெண்ணா!

கிரா: எங்கள் தந்தையும் தாயும் அவர் ஒருவரே!

சித்: (வந்துகொண்டு) நீங்கள் தன்னந் தனியே ஏன் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அர்ச்: அரசிளங்குமாரி எப்படியான பெண்மணியாக இருப்பாள் என அறிய முயற்சி செய்கிறேன். மக்களிடம் இருந்து அவளைப் பற்றிப் பல கதைகள் கேட்கிறேன்.

சித்: அவள் அழகியல்ல, என்னைப் போல, மரணத்தைப் போல் கருமைவாய்ந்த அழகான கண்கள் அவளிடம் இல்லை. அரசகுமாரி எந்த இலக்கையும் துளைக்க முடியும்; ஆனால் எங்கள் வீரரின் இருதயத்தைத் துளைக்க முடியாது என மக்கள் கூறுகின்றனர்.

அர்ச்: சித்ரா வீரத்தில் ஆடவன் என்றும், மிருதுத் தன்மையில் மெல்லியலாள் எனவும் கூறுகின்றனர் மக்கள்.

சித்: அதுவே அவளுடைய மிக்க துரதிஷ்டம். ஒரு பெண் பெண்ணைப் போல இருக்கும் பொழுது, அவளை நேற்று வனத்துப் பாதையில் உள்ள சிவன்கோவில் முன்றலில் கண்டிருந்தால், அவளைத் திரும்பி ஒருக்கால் பார்க்காமல் சென்றிருப்பீர்கள். ஒரு பெண்ணின் அழகில் சலிப்பு ஏற்பட்டுவிட்டதா? இருள் நிறைந்த ஒரு குகையில் எங்கள் நண்பகல் படுக்கையை அமைத்துள்ளேன். அங்கு கருங் கற்களின் மீது மென்மையான பச்சைப் பாசிகளின் குளிர்மை... உங்கள் கண்களை உறங்கச் செய்யும். வாருங்கள் அங்கே செல்வோம்.

அர்ச்: ஆருயிரே! இன்று அல்ல...சமபூமியை ஒரு கள்ளக் கூட்டமானது நெருங்குகிறது என்று நான் கேள்விப்பட்டேன், அந்தக் கிராமவாசிகளைப் பாதுகாப்பதற்கு நான் போய் ஆயுதங்களை ஆயத்தப்படுத்த வேண்டாமா?

சித்: நீங்கள் அவர்களைப் பற்றி ஒன்றும் அஞ்சவேண்டாம். அரசிளங்குமாரி சித்ரா தனது யாத்திரையை ஆரம்பிக்க முன்னர், ஊரின் எல்லை எல்லைகளிலும் திறமைவாய்ந்த காவலர்களை நிறுத்தியுள்ளார்.

அர்ச்: ஒரு சத்திரியரின் கடமையை ஆற்றச் சிறிது அவகாசம் அளிப்பீர்களா? புதிய புகழுடன் இந்தக் கரத்தை உனது தலைக்கு ஒரு தலையணையாக அமைப்பேன்.

சித்: உங்களை நான் போக விடாமல் தடுத்து எனது கரங்களுள் இணைத்து வைத்தால் என்ன நடக்கும்? போங்கள் ஆனால் ஒரு கொடியானது ஒருக்கால் ஒடிந்தால் பிறகு பற்றிச் சேராது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இருங்கள், உங்கள் மனதைக் குழப்பும் எண்ணங்கள் தான் என்ன? உங்கள் மனதில் இன்று யாரை எண்ணினீர்கள். அது சித்ராவா?

அர்ச்: ஆம் அது சித்ரா தான். அவள் என்ன பிரதிக்ஞையை நிறைவேற்ற தீர்த்தம் சென்றாள், என்று அறிய ஆவலாயிருக்கிறேன்.

சித்: அபாக்யசாலியாகிய அவளுக்கு என்னதான் இருக்கது?

அர்ச்: அவளைப் பற்றி யாவும் அறிய நான் ஆவலாக இருக்கிறேன். நள்ளிரவில் ஓர் அன்னிய நகரத்துக்கு வந்தவன் போல, என் நிலைமை இருக்கிறது. மாடமாளிகைகளும் கோட்டை கோபுரங்களும் பூந்தோட்டத்து மரங்களும் நிழல்களாகவும் நிச்சயமல்லாதனவாகவும் தோன்றுகின்றன. நித்திரையின் நிசப்தத்துக்கு ஊடாக, கடலின் ஒரே தன்மையான ஓசை இருந்திருந்து வருகின்றது. அவள், கதையைக் கூறுவீர்களா?

சித்: சொல்ல வேறு என்ன இருக்கிறது? அவள் ஒரு வெள்ளைக் குதிரைமீது, இறுமாப்புடன் ஆரோகணித்து இடது கையில் கடிவாளம் தாங்கியிருப்பாள்; வலதுகையில் வில்லும் தாங்கிய வெற்றித் தேவதையாக என் அகக் காட்சியில் புலப்படுகிறது! வாருங்கள். வான் வெளியில் இரு ஒளிக் கதிர்கள் ஊடுருவதைப் போல, நாம் இருவரும் வேகமான குதிரைகளில் பக்கம் பக்கத்தே சவாரி செய்வோம். இந்தப் பச்சை இருள் மண்டிக்கிடக்கும் மறியற்சாலை இருந்து வெளிக்கிளம்புவோம். அர்ச்சுனா... சொல்லுங்கள் ஏதோ ஒரு மாந்திரீக வித்தையினால் இந்த காமவிகாரமுடைய மென்மையை நான் விடுவித்து எதிர்தேனில் அப்பொழுது அதனை உங்களால் சமாளிக்க முடியுமா? உயர்ந்தவன விருட்சத்தைப்போல, பூமியில் படரும் கொடியைப்போல் அல்லாமல் தலையை நிமிர்த்தி நின்றேனாகில் ஆடவன் கண்ணுக்கு வசீகரமான காட்சியாகுமா? இல்லை, இல்லை, நீங்கள் அதனைத் தாங்க மாட்டீர்கள். என்னைச் சுற்றி ஓடி மறையுமியல்புடைய யௌவனத்தின் விளையாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு உங்களுக்காகப் பொறுமையுடன் காத்திருப்பது சிறந்தது. இரவு வாழ்வுக் கேற்ற துணைவி பகல் வாழ்வுக் கேற்ற துணைவியானால் இடது கரமானது வலது கரத்தின் கடமைகளை ஏற்றுக்கொண்டால் உங்கள் வீர ஆத்மா மகிழ்வெய்துமா?

அர்ச்: உன்னை முழுவதும் புரிந்து கொள்ள முடியவில்லை. நீ ஒரு பொன் விக்கிரகத்தின் ஆவேசம்கொண்டுள்ள தெய்வமாகத் தோன்றுகிறாய். நான் உன்னைத் தொட முடியாது, உனது விலைமதிப்பற்ற அன்பளிப்புகளுக்கு ஒரு பிரதி உபகாரமும் செய்ய முடியாது. ஆகவே எனது காதல் பூரணமடையவில்லை. உண்மையின் முதல் தோற்றம் மாயையே. என் ஆருயிரே, ஏன் உன் கண்களில் நின்று கண்ணீர் பொழிகின்றது? நீ ஏன் உனது கரங்களால் உனது வதனத்தை மூடுகிறாய் நான் உன்னை வருத்திவிட்டேனா, நான் சொன்னவற்றை மறந்துவிடு, எனது சம்சேனை கைகூடும் என்னும் எண்ணத்துடனே இருந்து எனது கடைசி நாட்களை நான் கழிப்பேனாக!-

சித்: இது தானா முடிவு? இல்லை ... எல்லாம் முடிந்த பின், ஏதோ ஒன்று எஞ்சும்... அதுதான் உங்களது பாதங்களில் இடும் எனது கடைசிப் பலி. என் இதய தெய்வமே! நான் வானுலகத்தில் உள்ள பூங்காவில் இருந்து ஒப்பில்லாத அழகுள்ள மலர்களை, உங்களை வணங்குவதற்காகக் கொண்டுவந்தேன், சடங்குகள் முடிவுற்ற பின், மலர்கள் வாடிவிட்டபின், கோவிலில் இருந்து இவற்றை வெளியே வீசிவிடுவேன். இப்பொழுது, உங்களைப் பூசிப்பவரை கருணைக் கண்களுடன் பாருங்கள். நான் உங்களைப் பூசித்த மலர்களைப் போல் அழகான சம்பூர்ணம் பெற்றவள் அல்ல. என்னிடம் பல குறைகளும் குற்றங்களும் உள்ளன. நான் இப்பெரிய உலகப் பாதையில் செல்லும் ஒரு பிரயாணி எனது ஆடைகள் அழுக்குப் படிந்துள்ளன, எனது பாதங்களில்... அதனைக் குத்திய முட்களினால் இரத்தம் வடிகின்றது ஒரு கணப்பொழுது வாழ்க்கையின் நிகரில்லா மாசற்ற, மலர் அழகை நான் எங்கே பெறமுடியும்? நான் உங்களுக்குப் பெருமிதத்துடன் கொண்டுவருவது ஒரு பெண்ணின் இதயகமலம். இங்கு இன்பங்கள் துன்பங்கள் யாவும் ஒருங்கிணைந்துள்ளன, தூசிக்கு இருந்து உற்பவித்த மலரின் நம்பிக்கைகளும் அச்சங்களும் இங்கு அழியாத காதல் வாழ்க்கைக்காக மூளுகின்றது. என் பதியே! மலரின் சேவை முடிவுற்றுவிட்டால், இன்னும் வரும் காலத்துக்கு இதனை ஏற்றுக் கொளலும். நான்தான் அரசனின் மகள் சித்திரா. நீங்கள் சிவன்கோவிலில் இருக்கும்பொழுது, உடல் நிறைய ஆபரணங்களுடனும் சிறந்த ஆடை அலங்காரங்களுடனும் ஒருபெண் உங்களிடம் வந்தது ஒருவேளை ஞாபகம் இருக்கலாம். அந்த வெட்கம் இல்லாத பெண், தான் ஒரு மனிதனைப் போல உங்களுடன் காதல் புரிய வந்தனள். எனது பதியே! நான் தான் அந்தப் பெண் அவள் என்னுடைய மாறுவேடமே பின்பு தெய்வங்கள் தந்த வரபிரசாதத்தால், ஒரு வருடம் வரைக்கும் ஒரு மானிடனால் பெறுதற்கு அரிய சுந்தர ரூபத்தை பெற்றேன். அந்த வஞ்சனையால் எனது வீரனின் இதயத்தைக் களிப்புறச் செய்தேன். உண்மையாக, அந்தப் பெண் நான் அல்ல. நான் தான் சித்திரா... எனக்குப் பிறக்கும் குழந்தை ஆண்மகவானால் நான் அவனை இரண்டாவது அர்ச்சுனனாக வளர்த்தெடுத்து, காலவேளையில் அவனை உங்களிடம் அனுப்பிவைப்பேன். அப்பொழுது என்னை உண்மையாக அறிவீர்கள்.

அர்ச்: சித்திரா ... எனது வாழ்க்கை பூரணமாயிற்று.

## கிறிஸ்துமஸ் தேவதை!

கிறிஸ்மஸ் விழாவின்போது வீடுகளை அலங்காரம்செய்வதில் மேலைநாட்டுமக்கள் மிகுந்தகவனம் செலுத்துகிறார்கள். விதவிதமான பொம்மைகளும் தோரணங்களும் என்ன விலையாக இருந்தாலும் வாங்கிவிடுகிறார்கள். 16 ஆண்டுகளுக்கு முன்பு பெர்லின் சிற்பி ஒருவர் மெழுகினால் செய்த "கிறிஸ்துமஸ் தேவதை" உருவச்சிலை ஜெர்மனியில் மட்டுமின்றி மற்ற நாடுகளிலும் பிரபலமடைந்தது. இந்தச் சிலை இல்லாவிட்டால், கிறிஸ்துமஸ் அலங்காரம் பூரணமாகாது என எல்லோரும் கருதுகிறார்கள். இந்தச்சிலையை மேலை நாடுகளில் வீட்டுக்குவீடு காணலாம்.


## வரி விளம்பரம்

### தேவை

செசவு நிலயத்தில் வேலை செய்வதற்கு பெண்கள் வேண்டப்படுகின்றனர். பயிற்சிபெற்றவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கேற்ப சம்பளம்வழங்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் ரமணி நெசவுநிலையம், ரமணி வாசா, சுதுமலை வடக்கு. மானிப்பாய் என்ற விலாசத்திற்கு நேரிலோ, கடிதமூலமாகவோ 21-1-65க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். தேவையானால் விடுதி வசதி அளிக்கப்படும். 1455

### சோதிடம்

மங்களேஸ்வரி சோதிட நிலையம் மங்காத புகழ் பெற்ற தாபனம். சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை அவர்களைக் கலந்தாலோசியுங்கள். பத்திரிகைகளினதும், பாராளுமன்ற உறுப்பினர்களதும் பாராட்டுதல்களைப் பெற்றிருப்பவர். சாதகம் எழுதவும், நினைத்த கேள்விகளுக்கு விடைகாணவும் 10 சத முத்திரையுடன் மங்களேஸ்வரி சோதிட நிலையம், திருக்கோணமலை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 1444

மனோகரா (யாழ்ப்பாணம்) போன்; 485
முத்துராமன் – தேவிகா நடித்த
**கடவுளைக் கண்டேன்**

ராஜா சினிமா (சுழிபுரம்)
டி. ஆர். மகாலிங்கம் யோகமங்களம் நடித்த
**வேதாள உலகம்**

REGAL — JAFFNA
NOW SHOWING
Elvis in
KISSIN COUSINS
(Panavision • Metrocolor)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதியிலுள்ள குடியிருப்புக்காணிபரப்பு 2 குழி 6 5/8 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. P. பொன்னுசாமி, 126/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 1421

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பிரபலங்கள் அடங்கிய சுற்றோலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50, வைத்தியர் பரிபூரணானந்த ஐயலாயபிள்ளையா... ம், யாழ்ப்பாணம்

### வைத்தியம்

தோல் வியாதி குணப்படுத்த உத்தரவாதம். சொறி, சிரங்கு, சேமல், கரப்பன் முதலியன. சச்சிதானந்த வைத்திய சாலை, வைத்தியர் பொ. ஸ்ரீபதிசர்மா, இந்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி. 1382

### விற்பனைக்கு

20 பரப்பு கட்டிடக்காணி மொத்தமாகவும் சிறு பகுதிகளாகவும்விற்பனைக்குண்டு. இது லாலி ரோட்டில் திருநெல்வேலி வடக்கிலிருக்கிறது. மின்சாரம், பல்வசதிகளுமுண்டு. விபரம் கீழ்வருபவரிடம் அறியவும்: எம். எஸ். நடராசா, அம்மன்கோவிலடி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1447

### தேவை

தமிழ் ரெமிங்டன் தட்டச்சு (ஸ்ராண்டட்) இயந்திரம் ஒன்று தேவை. விலை விபரத்துடன் அறியத்தரவும். க. பாலசுப்பிரமணியம், "மோகனபதி" திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம். 1448

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள CN 1182 A 40 விற்பனைக்குண்டு. விபரங்கள்: "மல்லிகை வாசா" அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 1442

பிளாஸா தேயிலை
பாவிப்பாளர்களுக்கு!
ரூபா 15,000
(283 பரிசுகள் காத்திருக்கின்றன)
போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.
பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,
தரத்திலும் குணத்திலும் உயர்வானது,
தேயிலை தரம் உருசிபார்க்கும்
நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது
இன்றே வாங்கிப் பருகி ... ... ...

4-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) மோடேர்ன் (பதுளை) ராஜ் (கீர்கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
**கர்ணன்**
(ஈஸ்ட்மென்கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். ஜே. வி. அனுதாபம்

"காலஞ்சென்ற செனட்டர் நடேசபிள்ளை தமிழில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். அவர் தம்முடைய வாழ்க்கையின் பெரும் பகுதியை இலங்கைக்கென்றே செலவிட்டார்" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு நடேசபிள்ளையின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'திரு நடேசபிள்ளையின் திடீர் மரணம் குறித்து பெரிதும் கவலைப்படுகிறேன். திரு நடேசபிள்ளை ஆங்கிலத்தையும் நன்றாகக் கற்றவர். அவருடைய கல்வியறிவை மதித்து இலங்கைச் சர்வகலாசாலை அண்மையில் டாக்டர் பட்டம் கொடுத்தது. அதற்கு முற்றிலும் தகுதியானவர் அவரே. அவருடைய அரசியல் வாழ்வின் முற்பகுதியில் தமிழர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவே உழைத்தார். அவருடைய உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்' என்றும் திரு எஸ் ஜே வி கூறினர்.

# "மிதிலை அரசருக்கு ஒப்பானவர்"

## —சேர் நிக்கலஸ் அட்டிகலே

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது திரு. க. நடேசபிள்ளைக்கு "இலக்கிய கலாநிதி" என்னும் பட்டமளிக்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார். அச்சமயம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலே, திரு. நடேசபிள்ளை பற்றிக் கூறியதாவது:

"திரு. நடேசனின் தொழில் கல்வித்துறையில் இருந்த போதிலும் அவரின் பொழுதுபோக்கு நேரங்களில் அவர் இலக்கியம், சரித்திரம், மெய்விளக்கம் முதலியவற்றில் கவனம் செலுத்தினர். இலங்கையில் தமிழிலும் இந்து சமயத்திலும் அவர் ஒரு பிரசித்தி பெற்ற வல்லுனராகக் கணிக்கப்பட்டார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாவிலும், இந்தியத் தமிழ் அக்கடமி, சைவசித்தாந்த மகாசமாஜயம் முதலிய சைவக்கழகங்களினது விழாக்களிலும் திரு. நடேசபிள்ளை தலைமை வகிக்கும் பெரும் வாய்ப்பு பெற்றவராவார். அவர் அண்மையில் தமிழில் எழுதிய 'சகுந்தலை வெண்பா' பலரின் பாராட்டைப் பெற்றதுடன் அண்ணாமலை சர்வகலாசாலையில் ஒரு விசேஷ வைபவத்தில் சேர் சி. பி. இராமசாமி ஐயரினால் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது தனிச்சிறப்பு வாய்ந்த தொன்றாகும்.

திரு. நடேசபிள்ளை ஆங்கிலத்திலும் தமிழிலும் தலைசிறந்த பேச்சாளராவார். திரு. நடேசனின் பலதரப்பட்ட முயற்சிகளிலும் ஆற்றல்களாலும் இன்றைத் உலகில் அவரை மிதிலையில் வருகின்ற ஜனக அரசருக்கு ஒப்புவமை கூறலாம் போல் தோன்றுகிறது."

# "மொழிவளர்ச்சிக்கு பெரும்பாடுபட்டவர்"

திரு. நடேசபிள்ளையின் மறைவுச்செய்திகுறித்து ஊர்காவற்றுறை முன்னுள் எம். பி. திரு. வி. நவரத்தினம் கூறியதாவது:

திரு. நடேசபிள்ளையின் மறைவு தமிழ் பேசும் நல்லுலகிற்குறிப்பாக தமிழ் இலக்கிய உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும். தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பணிகளை தமிழ் உலகம் மறக்கமுடியாது.

இந்தியாவிற் பிறந்தபோதிலும் ஈழத்தமிழ் நாட்டிற்கு அனது இலக்கியப்பணிகளையும் மற்றும் பொதுநல சேவைகளையும் ஆற்றியுள்ளார் அவர் ஆக்கிய தமிழ் நூல்களை நான் மிகவும்பெரிய ரசனையுடன்படித்து அனுபவித்திருக்கின்றேன். தமிழ்ப் பெரும் புலவர்களுடன சமமான இடத்தைப பெற்று மொழிவளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

அரசியலில் அவருக்கும் எனக்கும் அபிப்பிராய பேதம் இருந்த போதிலும் அவர் கொண்டிருந்த மொழிப்பற்று, பண்பாடு எனது உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. அவர் என்னுடைய உள்ளம் கவர்ந்த தமிழ்ப் பெரியார்.

# வானத்தில் நகர்ந்த ஒளி

## நட்சத்திரமா ராக்கெட்டா?

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த வியாழக்கிழமை இரவு, வானத்தில் மிகவும் உயரத்தில் நட்சத்திரம் மாதிரியானதொரு ஒளி மெதுவாக நகர்ந்துசென்று கொண்டிருந்த அதிசயத்தைத் தாம் தமது நண்பர்களுடன் பார்த்ததாக கொக்குவிலைச் சேர்ந்த திரு. சிவஞானயா சுப்பிரமணியம் என்பவர் அறிவித்துள்ளார்.

இந்த வெளிச்சம் தென் மேற்குப்பகுதியிலிருந்து வடகிழக்கே நகர்ந்து சென்று கொண்டிருந்ததென்றும் இதன் அமைப்பு, மற்றைய ஒளிவீசும் நட்சத்திரங்களைப் போன்றே இருந்ததென்றும் இவர் அறிவிக்கின்ருர். இந்த ஒளி, சந்திரனை கோக்கிச் சென்று பின்னர் வேறு திசைக்குத் திரும்பியதாம்.

வியாழக்கிழமை இரவு 6-45 க்கு இந்த ஒளியைக் கண்டதாகவும் சுமார் 15 நிமிட நேரம்வரை அது நகர்ந்து சென்றதென்றும் கூறிய இவர் அந்த ஒளி, ஒரு ராக்கெட்டாகவிருக்கலாம் என்று நம்பிக்கைதெரிவித்தார்.

# சமய வகுப்பு

சங்கானை, வெள்ளி

சங்கானை வெல்லில் முக மூர்த்தி கோவிலில் சைவ சமய வகுப்புக்களை நேற்று திரு மு. சிவானந்தம் ஆரம்பித்துவைத்தார். இந்த வகுப்பில் பலர் கலந்துகொண்டனர்.

"சமய வகுப்புக்களினுல் நாம் வாழ்க்கையில் பலவித மான நன்மைகளைப் பெறலாம். இதனை இன்றைய சிறுவர்கள் நன்ருக உணர்ந்துள்ளார்கள்" என்று திரு. மு. சிவானந்தம் சைவசமய வகுப்புகளை ஆரம்பித்து வைப்பதற்கு முன் பேசுகையில் குறிப்பிட்டார்.

# இலக்கியப்பணி

(1-ம பக்கத் தொடர்ச்சி)

புதிய பண்பாட்டினை உலகில் இக்குடும்பத்தினர் நிலை நாட்டினர்.

ஆனந்தகுமாரசாமி, சர். பி அருணசலம், சர். பி. இராமநாதன முதலியோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாகுலும் அவர்கள் இந்தவகையில் ஆற்றிய தொண்டினை இந்தியாவும் சிறப்பாக தமிழ் நாடும், மறக்கமுடியாது. சேய் நாட்டுக்கும், தாய் நாட்டுக்கும் உள்ள தொடர்பு மேலும் ஓங்கும் வாய்ப்பு வந்துளளது. இராமநாதனுர் தமது ஞான குருவின் குடியில் வந்த நடேசனுரையே மருமகனுகப்பெற்ருர் நடேசனுர் இலங்கை அரசியல் வாழ்விலும், பண்பாட்டு வாழ்விலும் தலைசிறந்து வாழ்ந்ததோடு, சிறந்த தமிழ்க்கலைப் பணியும்செய்துகொண்டே வருகிருர். இத்தகைய பண்பாட்டின் இலகியக்கலை விளக்கமே நடேசனுர் தரும் சகுந்தலை வெண்பா."

# சர்ச்சில் கடும் சுகயீனம்

## நிலைமை கவலைக்கிடமென டாக்டர்கள் அறிவிப்பு

லண்டன், ஜன. 16

பிரிட்டனின் யுத்த காலத் தலைவர் சர். வின்டன் சர்ச்சில் (90 வயது) கடுமையாக சுகவீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுளளது.

மூளையிலுள்ள இரத்தக்குழாய் வெடித்ததைததொடர்ந்து அவர்கடுமையாகப்பாதிக்கப்பட்டிருக்கிருர் என்று வைத்திய அறிக்கையொன்று கூறுகிறது.

சர்ச்சில் இன்றும் உறக்கமாகவே இருக்கிருர். அவரின் நிலைமை கவலைக்கிடமாகவிருக்கிறது. அவர் விரைவிலே சுகமடையவேண்டுமென்று உலகத் தலைவர்கள் செய்தியனுப்பியுள்ளனர். அவரின் சுகவீனம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோன்ஸன், பிரெஞ்சு அதிபர் டிகோல், இத்தாலிய அதிபர் முதலியோர் கவலை தெரிவித்து செய்தியனுப்பியுள்ளனர்.

# நடேசபிள்ளை வாழ்க்கை வரலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றினுர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பஷாபிவிருத்திச் சங்கத்திலும் பலகாலமாக தொண்டாற்றிவந்தார்.

நீண்டகாலம் இலங்கை அரசாங்கசபை அங்கத்தவராக இருந்து தபால், வானெலி மந்திரியாக கடமை புரிந்த இவர், தமிழாராய்ச்சியில் ஈடுபாடுகொண்டு, சென்னை சர்வகலாசாலை நூற்றுண்டு ஆராய்ச்சிமலரில் "மாணிக்க வாசகர் காலம்" என்னும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டார். "திருவள்ளுவர் காலம்" என்னும் அரிய ஆராய்ச்சி விரிவுரையும்சென்னை சர்வகலாசாலையின் சார்பில் இவரால் நிகழ்த்தப்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட இலங்கைச் சரித்திரத்திற் சில பகுதிகளும், சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகம் வெளியிட்ட "கலைக் களஞ்சிய"த் தொகுதிகளிற் சில கட்டுரைகளும் திரு. நடேசபிள்ளையினுல் எழுதப்பட்டவை.

இலங்கையில் இவர் 1936 - 1946 வரை கல்விச்சபையில் அங்கத்தவராகவிருந்தார். 47 - 50 வரை மத்திய ஆலோசக கல்விச்சபையிலும் 47 – 50 வரை டரீ சை சபையிலும் 47-50 வரை கல்வி ஆராய்ச்சி சபையிலும் 37 - 46 வரை யாழ்ப்பாண மாவட்ட கல்விச் சபையிலும் அங்கத்தவராகவிருந்தார்.

தமிழ் இலக்கியத்துறையில் இவர் ஆற்றியசேவை அளப்பரியது.

வடஇலங்கை கீழைத்தேச சங்கீதசபையை ஸ்தாபிப்பதில் பெரும் பங்கு கொண்ட இவர், அதன் முதலாவது தலைவராகவும் கடமையாற்றினுர். 1924-47 வரை, யாழ்ப்பாணம் கலாநிலையத்தின் தலைவராகவிருந்தார். கொழும்பு விவேகானந்த சபையின் தலைவராக 1937 - 47 வரையும் பின்னர் 54, 55-ம் வருடங்களிலும் கடமை புரிந்தார். சாகித்திய மண்டலத்தின் அங்கத்தவராகவும் இவர் இருந்தார்.

1895-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி பிறந்த திரு. நடேசபிள்ளை 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் திகதி இரவு மாரடைப்பால் காலமானுர்.

## "தலைசிறந்த பேரறிஞர்"

'செனட்டர் நடேசபிள்ளையின் மறைவு தமிழ்பேசும் மக்களுக்கு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. அவர் தலைசிறந்த பேரறிஞர்' என்று யாழ்ப்பாணம் முன்னுள் எம். பி. திரு அல்பிரட் துரையப்பா திரு. நடேசபிள்ளையின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

இந்துப பல்கலைக்கழகத்தை அவர் அமைப்பதில் கொண்டிருந்த ஆர்வத்தை நாம் நன்கு அறிவோம். அவர் தமது பிற்காலத்தில் இந்த முயற்சிக்காகவே பெரிதும் உழைத்து வந்துள்ளார். அவரது முயற்சிகள் பெருமளவில் பூர்த்தியடையும் நிலையில் நம்மைப் பிரிந்தது நமது துரதிருஷ்டமே.

# நெடுந்தீவுப் பகுதியில் காணமற்போனவர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் வீசிய சூறாவளிகாரணமாக நெடுந்தீவுப் பகுதியில் காணமற்போன, மாண்டுபோனதாகக் கருதப்படுபவர்களின் பெயர்களும் அவர்களின் பராமரிப்பில் உள்ளவர்களின் விபரங்களும்:

யேமிஸ் அருளப்பு மனைவி, 2 பிள்ளைகள். அருளப்பு அமிர்தநாதர் மனைவி, 1 பிள்ளை. சுவாந்தகுருஸ் அந்தோனிப்பிள்ளை மனைவி, பிள்ளைகள், மடுத்தீன் திருச்செல்வம் மனைவி, 3 பிள்ளைகள், முடியப்பு வேதநாயகம் தாய், தந்தை, சகோதரங்கள், அவரான் மடுத்தீன் மனைவி. மரியதாஸ யோசேப்பு மனைவி, குழந்தை. நஸரேத் தோமாஸ் பெர்ணண்டோ மனைவி, குழந்தை.

—

மன்னர்

# குடும்பங்களுக்கு நிவாரண உதவி

மன்னர், சனி

மன்னர்ப் பகுதியில் இம்முறை தைப் பொங்கல்விழா மிகவும் அமைதியாக நடைபெற்றது. காலையில் மழைத்தூற்றலும், குளிருமாக இருந்தது. சில இல்லங்களில் பொங்கல் நடைபெறவில்லை. சமீபத்தில் கடல் பொங்கியதால் ஏற்பட்ட சேதங்களும்-கவலைகளும்தான் இதற்குகாரணமாகும். கடல் தொழிலாளர் கடலுக்கு சாந்திசெய்தனர்.

எருக்கலம்பிட்டிக கிராமத்துக்குப் போகும் ரஸ்தாவில் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. தள்ளாடியிலிருந்து மன்னர்ப்பாலம்வரையிலுள்ள ரஸ்தாவில் சில உடைப்புகள் திருத்தப்பட்டு விட்டன. தற்பொழுது ஒவ்வொரு குடும்பத்துக்கும் 50 ரூபாய்வீதம் நிவாரணநிதி காரியாதிகாரி கந்தோரில் வழங்கப்படுகிறது.

# பல்கலைக்கழகம் உருவாக வேண்டும்

## ஆத்மசாந்திக்கு நாம் செய்யும் பணி

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை கூறியதாவது:

திரு. நடேசபிள்ளையின் மறைவு சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் நஷ்டமாகும். அவர் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகளை நாம் மறக்கமுடியாது. நாவலர் பணியை சர் பொன். இராமநாதன் அவர்கள் தொடர்ந்து செய்தார். இராமநாதனின் பணியை திரு. நடேசபிள்ளை தொடர்ந்து செய்து தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும் புகழ் தேடிக் கொடுத்தார். ... கட்டு ... வாகவும், இரு ... கல்லூரிகளையும் சிறப்பாக நடத்தியும் தொண்டாற்றினுர். இராமநாதன் இந்துப்பல்கலைக் கழகம் விரைவில் செயல்படுவதே அவர் கண்ட கனவு. அக்கனவு விரைவில் நிறைவேற ஆவன செய்வதே அவருக்குச் ... அவர் ஆத்ம சாந்தியடையச் செய்யும் உதவியாகும்.

—

சென்னை, ஜன. 15

இலங்கைக்கும் சென்னை கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையே இன்று 3 நாள் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகியது.

இலங்கை கிரிக்கெட் கோஷ்டியின் சுற்றுப்பிரயாணத்தில் இது கடைசி விளையாட்டாகும்.

யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## பழைய மாணவர் தினம்

ஞாயிறு, 31-1-65

16-1-65. காரியதரிசி

## திறப்பு விழா

எங்கள் புதிய ஸ்தாபனமாகிய யாழ்ப்பாணம் லேக்வியூ ஹோட்டல் திறப்பு விழா நாளை காலை 10-45 மணிக்கு நடைபெறவிருக்கிறது என்பதை எமது ஆதரவாளர்கள், வாடிக்கைக்காரர்கள், நண்பர்கள். உறவினர்கள் ஆகியோருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேும். தங்கள் வரவை எதிர்பார்க்கும்:

எஸ். பொன்னுத்துரை; பொ. தங்கநாயகம், திருநெல்வேலி (ஜெயாபிஸ்கட் தயாரிப்பாளரும், ஏற்றுமதி இறக்குமதி ஏஜண்டுகளும்.) 1450

## தேவை

சமையல் வேலையில் தேர்ச்சியுடையவர்களும், தேநீர் தயாரிக்கத் தெரிந்தவர்களும் இடியப்பம் செய்யத் தெரிந்தவர்களும் உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும்: மனேஜர், லேக்வியூ ஹோட்டல், யாழ்ப்பாணம். 1451

## அல்சேஷன் நாய்க்குட்டிகள்

பதிவு செய்யப்பட்ட (Pedigreed) அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. க நடேசன், 16, மணிமகன் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 1449

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org